பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பீ.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 22 சனிக்கிழமை (05.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 107

## பக்தாத்தை நெருங்கும் அமெ.படைகள்

# பயங்கர இரசாயனக் குண்டுகளை ஈராக் எந்நேரமும் பாவிக்கலாம்!

## நேற்று 320 ஈராக்கிய படையினர் பலி-2500 பேர் சரண்

(நமது வெளிநாட்டு செய்திச் சேவை)

ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமெரிக்கக் கூட்டணிப் படையினருக்கும்,ஈராக்கியப் படையினருக்குமிடையே உக்கிரமான சண்டை நடை பெற்று வரும் வேளையில் பாக்தாத் தலை நகரைக் காப்பாற்ற ஈராக்கிய குடியரசுப் படையினர் யுத்த வியூகங்களை மாற்றி வகுத்து இறுதிக்கட்ட யுத்தத்திற்கு தயாராகி வருவதாக ஈராக்கிய துணை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கூட்டுப் படைகள் ஈராக் மீது போர் தொடுத்த 16வது நாளான நேற்று உக்கிரமான லேசர் குண்டுகளை வீசி தலைநகர் பாக்தாத்தில் இருந்து சுமார் 20கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஈராக்கின் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ''சதாம் விமானத் தளம்'' அமெரிக்க கூட்டணிப் படையினரின் வசம் வீழ்ந்துள்ள நிலையில் அமெரிக்க கூட்டுஅணிப் படையினர் பாக்தாத்தை நோக்கி முன்னேறிய வண்ணம் உள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனின் விமான நிலையம் அமெரிக்கக் கூட்டுப் படைகள் வசம் வீழ்ந்த போது சுமார் 320 ஈராக்கியப் படையினர்கள் கொல்லப்பட்டனர்.இந் நிலையில் முன்னேறி வரும் அமெரிக்க கூட்டுப் படையினரை துரத்தியடிப்பதற்கு ஈராக்கியப் படைகள் தயாராகி வருவதாகவும் அதற்கான தகுந்த தருணத்தை சதாம் ஹுசைன் எதிர்பார்த்து இருப்பதாகவும் ஈராக்கிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் இந்த நிலைப்பாட்டினால் (10ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் தாராளம்

### யாழ்.பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் உள்ள தனியார் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் விற்பனை நிலையங்களில் போதியளவு எரிபொருள் இருப்பில் இருப்பதால் மேலதிகமாகக் கொண்டு வரப்படும் எரிபொருளை இறக்க முடியாத நிலையில் வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இருப்பதாக வட பிராந்திய முகாமையாளர் யோ.அ.அந்தோனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

72 ஆயிரத்து அறுநூறு லீற்றர் பெற்றோலை எடுத்து வந்துள்ள மூன்று பௌசர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன வளவில் கடந்த இரண்டு தினங்களாக எரிபொருளை இறக்க முடியாத நிலையில் தரித்து நிற்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா திடீர்த் தாகுதல்களை மேற் கொண்ட போது தேவைக்கு அதிகமான எரிபொருள் (10ம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கியதில் கிராம அலுவலர் மரணம்

### கரவெட்டி-வதிரியில் பரிதாபம்

(பருத்தித்துறை)

மின்சாரம் தாக்கியதில் கிராம அலுவலர் ஒருவர் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

வதிரி கரவெட்டியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை முருகானந்தம்(வயது41) என்பவரே மரணமானவராவார்.

நேற்றுப் பிற்பகல் 4.30மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது. வீட்டில் இருந்த தொலைக் காட்சிப் பெட்டியை இயக்க முற்பட்ட வேளை மின் ஒழுக்கில் அகப்பட்டு நிலத்தில் தூக்கி வீசப்பட்ட அவர் அவ் விடத்திலேயே மரணமானார்.

பிரஸ்தாப நபரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை பொற்பதி கிராம அலுவலராக இவர் தற்போது கடமையாற்றி வருகிறார். (த-52)

# அமைச்சர் பீரிஸ் நாட்டின் ''துரோகி''

### பொ.ஐ.மு.ஆட்சி அமைத்தால் அவரைக் கைது செய்வோம்
### முன்னாள் அமைச்சர் மங்கள கூறுகிறார்

(நமது நிருபர்)

**பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தால் நாட்டின் ''துரோகி'' என்ற வகையில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கைது செய்யப்படுவார் என்று முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இன்றைய அரசின் தனியார் மயப்படுத்தல் திட்டத்திற்கு அமைவாக இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு பல நாடுகள் முன் வந்துள்ளன.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வுக்கென உலக நாடுகள் உதவி வழங்குவதை பொது ஜன ஐக்கிய முன்னணி ஒரு போதும் எதிர்க்க மாட்டாது. எனினும் இந்த உதவிகள் யாவும் தனியார் மயப்படுத்தலின் விளைவாகவே கிடைக்கவுள்ளன என்றும் கூறினார்.

அண்மையில் முல்லைத் தீவு கடற்பகுதியில் சீனப் படகு மூழகடிக்கப் பட்டமைக்கு விடுதலைப் புலிகள் அல்லாத ஆயுதம் தாங்கிய மூன்றாம் தரபபுக்குழுவே காரணமென வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ள கருததுக் குறித்து இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த கலாநிதி சரத் அமுனுகம, அமைச்சர் கூறிய அந்த மூன்றாம் (10ம் பக்கம் பார்க்க)

## பிரதி நிதிஅமைச்சர் இன்று யாழ்.வருவார்

(கொழும்பு)

பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தனா இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நேரில் ஆராய்ந்து அறிந்து கொள்ளும் முகமாக யாழ்ப்பாணம் வரவுள்ள பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தனா வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவியைச் செய்யவுள்ளார். (வ)

## அமெரிக்க விமானப்படை அதிகாரி இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வருகைதந்துள்ள அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய விமானப்படைக் கட்டளை அதிகாரி ஜெனரல் வில்லியம் கே.வெசாக் தலைமையிலான குழுவினர் இன்று யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.வரும் இக்குழுவினர் யாழ் படையதிகாரிகளுடன் விசேட மாநாடொன்றை பலாலியில் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அத்துடன் குடாநாட்டிலுள்ள படைமுகாம்களிற்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

இதேவேளை இக்குழுவினர் நேற்று இலங்கை முப்படைத் தளபதிகளையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெனாண்டோவையும் சந்தித்து பேச்சுவாத்தை நடத்தியுள்ளனர். (இ-8)

## யாழ்.வந்த டொல்பின் விபத்து-9 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்து கொண்டிருந்த டொல்பின் ரக வான், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் வானில் இருந்த ஒன்பது பேர்படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3மணியளவில் அநுராதபுரத்துக்கு அருகிலுள்ள மருதனாமடு எனும் இடத்தில் இவ் விபத்து இடம் பெற்றது.

காயமடைந்த அனைவரும் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் மருதனாமடு கைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவ்வானில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 பேர் பயணம் செய்துள்ளனர் . (இ)

# சமாதான முயற்சிகள் சிதறுண்டு செல்வதை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாது

## அமெ.ஒத்துழைப்பு நிறுவனப் பிரதிநிதியுடன் எடுத்துரைப்பு

(தென்மராட்சி)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் எக் காரணம் கொண்டும் துணடு துண்டாக உடைந்து போவதைக் காண நாம் விரும்பவில்லை. எனவே, சமாதான முறைமைகள் உறுதியுடன் பேணப்பட வேண்டியது அவசிய மாகும் என்று யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் இணையத்துக்கு வருகை தந்திருந்த அமெரிக்க ஒத்துழைப்பு நிலையத்தின் பிரதிநிதியிடம் உறுதிபடத் தெரிவித்தனர்.

மனித நேய அமைப்புகளின் ஒன்றியத தலைவர் எஸ். பரமநாதன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமெரிக்க ஒத்துழைப்பு நிலையத்தின் இலங்கை,இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குமான பிரதிநிதி விலலியம் கொன்சிலின் மற்றும் இணைப்பாளர் செல்வி திருமகளும் பங்கு கொண் டிருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதுள்ள சமாதான சூழ்நிலையில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றியும் மாவட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டும்தான் இங்கு வருகை தந்தாக வில்லியம் கொன்லின் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது ஒன்றியத்தலைவர் எஸ். பரமநாதன் கருத்துத் தெரிவிக்கும்போது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவு இப்பொது மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கிறது. இதனைக்குறைப்பதற்கான எத்தகைய நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற் கொள்ளாமல் இருந்து வருகின்றமை எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது . அதியுயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பம் தமது நிரந்தரமான ஜீவனோபாயத்திற்குட் பெரும் கஷடப்பட்டுவருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி அங்கு கருத்துக்கூறும்போது,

தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக்காண வேண்டும் என்பதில் அரசாங்கம் விசுவாசமாக செயற்பட வில்லை என்ற உள்ளுணர்வு எமது மககளுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன இப்போதுள்ள சமாதானத்தினை பாதுகாப்புப்படையினர் முற்று முழுதாக ஏறக வில்லை. யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தினை விட பாதுகாப்புப்படைகள் மிகவும் பலம் பெற்ற நிலையில் இருக்கின்றன என்பதனை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று கூறினார்.

சமூகஅபிவிருத்தி மன்றத்தின் தலைவி திருமதிஅ.ஜெகதீசன் அங்கு குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு நீண்ட காலமாக நிலவி வருவதால் எமது மாணவர்கள் தமது கல்வியை முழுமையாகக் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதே சமயம்,ஆசிரியநியமனத்தை மேற்கொள்ள நிதி பற்றாக்குறையாக உள்ளது என அரசு கூறிவருகிறது. ஆனால்,தென்பகுதியில் 14ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இறுதியில்இவர்களின் கருத்துக்களுக்கு பதிலளித்த அமெரிக்க அதிகாரி யாழப்பாணத்தில் சமாதான நடவடிக்கையை மேலும் வலுப்படுத்த செய்ய வேணடியவை பற்றிச் சம்பந்தப் பட்டவர்களுடன் பேசுவதாகவும் குறிப்பிட் டார். (உ-77)

## வடக்குகிழக்கு தொண்டர் ஆசிரியர்

# நிரந்தர நியமனம் குறித்த இறுதி முடிவு விரைவில்

(கொழும்பு)

வடக்குகிழக்குப் பகுதிகளில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் முடிவு எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு உறுதியளித்துள்ளார்.

தமிழ் ஆசிரியர் சங்கமும், தமிழ்க கூட்டமைப்பின் 6 பாராளு மன்ற உறுப்பினர்களும் கல்வி அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தின.

இப் பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு உறுதி மொழி யை தந்ததாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

க.பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான விணணப்பங்கள் மிக விரைவில் கோரப்படும் எனவும், ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் உள்ள வயதெல்லை நீக்குவது சம்பந்தமான பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும அங்கு உறுதி மொழியளிக்கப்பட் டது எனவும் மகாசிவம் தெரிவித துள்ளார்.

இதேவேளை, திருகோணமலை மாகாணக்கல்வி அமைச்சுக்கு முன்னால் நடைபெற்றுவரும் தொண்டர் ஆசிரியர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 33 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (உ-8)

# இலங்கைக்கான சூழல் பாதுகாப்பு உதவியை அதிகரிக்க புஷ் இணக்கம்

(கொழும்பு)

சூழல் பாதுகாப்புக்காக இலங்கைக்கு வழங்கி வரும்உதவிகளை அதிகரிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இணங்கியுள்ளார்.

சுற்றாடல் மற்றும் இயற்கை வளத துறை அமைச்சர் ருக்மன் சேன நாயக்கா,அமெரிக்காவின் சுற்றாடல் தொடர்பான பல தேசிய நிறுவனம் மற்றும் சர்வதேச சுற்றாடல் தொடர்பான அமைப்புக்களுடன்நடத்திய பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை,அமெரிக்க சுற்றாடல பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி மொடிவைற் மனுடன், இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பு பற்றி விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ,சுற்றாடல் செய்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் வன வள பாதுகாப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன்அவசியம் தொடர்பாகவும் உலக வங்கியின் உப தலைவர் இயன ஜோன் சனுடனும் அமைச்சர் கலந்துரையாடியுளளார். (உ-8)

## தங்கத்தின் விலைவீழ்ச்சி

(கொழும்பு)

ஈராக்கில் ஏற்பட்டுள்ள யுத்தத்தின் காரணமாக கொழும்பில் பவுணின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனை இலங்கை வங்கியின் தங்க விற்பனைப் பிரிவு உறுதிப்படுத்தி யுள்ளது.

ஈராக் யுத்தத்திற்கு முன்னர் 8 ஆயிரத்து 799 ரூபாவாக விற்ற பவுண் தற்போது 7 ஆயிரத்து 547 ரூபாவாக விற்கப்படுவதாக இலங்கை வங்கியின் தங்க விற்பனைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேசமயம் கொழும்பு தனியார் தங்க வர்த்தக நிலையங்களில் 9 ஆயிரத்து 500 ரூபாவாகவிற்கப்பட்ட தங்கம் தற்போது 8 ஆயிரத்து 400 ரூபாவாக விற்னை செய்யப்பட்டு வருகிறது.இன்னும் சில வாரங்களில் பவுணின் விலை மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (உ-10)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 6 மணி முதல நடை பெறவுள்ளது. (உ-10)

## தையற் பயிற்சி நெறி

(ஊரெழு)

ஜி.ரி.சற் நிறுவனமும் சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து மேற்கொண்டு வரும் சமூகமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு அளவெட்டி பத்தானைக் கிராம பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் அண்மையில தையல் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (உ-95)

## ஜப்பான் நிறுவனங்களின் அனுசரணையுடன்

# குடா நாட்டவர்களுக்கு இந்தோ.வில் மீன்பிடி, இறால் வளர்ப்புப்பயிற்சி

(தென்மராட்சி)

மீன்பிடி,இறால் வளர்ப்பு போன்ற துறைகளில் நவீன பயிற்சிகளை பெறும் வகையில் குடா நாட்டவர்களை இத்தோனேசியாவுக்கு அனுப்ப ஜப்பானில் உள்ள உதவி வழங்கும் நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

இதன் பொருட்டு ஜப்பானிய உயர் நிறுவனங்கள் மூன்றின் உயர் அதிகாரிகள் நேற்று முன்தினம் குடா நாட்டுக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ,வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து மேற்படி வெளிநாட்டுப்பயிற்சித் தொடர்பில் ஆராய்ந்தன.

யாழ். குடா நாட்டில்,மீன்பிடி, இறால் வளர்ப்பு மற்றும் கஜு ஏற்றுமதி போன்ற துறைகளை ஊக்குவிப்பதில் இந்த ஜப்பானிய நிறுவனங்கள் ஆர்வம் கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

மேற்படிநிறுவனங்களின் உயர் அதிகாரிகள் நாவாந்துறையில் சேதமடைந்த மீன் சந்தையை பார்வையிட்டதுடன் மீன் சந்தைகளில் புனரமைப்பு மற்றும் ஐஸ் தொழிற்சாலை புனரமைப்பு குறித்தும் இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை,மேற்படி துறைகளில நவீன பயிற்சிக்கு இந்தோனேசியா செல்லவுள்ளவர்களைத் தெரிவு செய வதில் தமிழர்புனர்வாழ்வுக்கழகமும் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்கங்களின் சமாசமும் இணைந்து ஈடுபடவுள்ளன. (உ-77)

# உலக சாதனை படைக்கும் ஆஸி.இன் கனவு பலிக்குமா?

## ரசிகர்கள் சந்தேகம்

(சிட்னி)

அவுஸ்திரேலியா அணியின் நடுவரிசைததுடுப்பாட்ட வீரர் டேமியன மார்ட்டீன் மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான முதல் போட்டிகளில் விளையாடமாட்டார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

உலகக்கிண்ணப் போட்டிப் பயிற்சியின் போது மார்ட்டீனுக்கு ஆட்காட்டி வீரலில் எலும்பு முறிவு ஏறபட்டமை தெரிந்ததே.

இறுதிப் போட்டியில் விளையாடி உலகக்கிண்ணத்தை கைப்பற்ற அணிக்கு உதவ வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக வலியைப் பொருட்படுத்தாது இறுதிப் போட்டியில பங்கு பற்றினேன். ஆயினும் தற்போது பூரண சுகம் பெற வேண்டிய தேவை உள்ளது என்று மார்ட்டீன் தனது நிலையை ரசிகர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில்,அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ரத் மேற்கிந்திய தீவுகளுக்கு பயணித்துக் கொண்டிருக்கையில் மனைவிக்கு இடுப்புபுற்று நோய் என்ற செய்தி கிடைத்ததும் லண்டனுடன்சிட்னிக்குத்திரும்பியுள்ளார்.

இதனால் இவரும் ஆரம்ப போட்டிகளில் பங்கு பற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அவுஸ்திரேலிய அணியின் தொடர் வெற்றி பெற்று உலக சாதனை படைக்கும் கனவு பலிக்குமா என ரசிகர்கள் சந்தேகம வெளியிட்டுள்ளனர். (உ-55)


## சிறுவிளம்பரம்

### இசைக் குறிப்புகள்

Organ, வயலின் போன்ற எல்லா இசைக்கருவிகளுக்குமான சினிமாப் பாடல்களின் ''இசைக்குறிப்புகள்'' (பாகம்3) வெளிவருகின்றது. தொடர்பு: பி..பகல் 3மணியின பின், S.S.றஜீந்திரன்,75 கோவில்வீதி, நல்லூர். (கைலாச பிள்ளையார் கோவிலிலிருந்து 300m தெற்கே) T.P-077 7031293 (6878)

### மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் வசிக்கும் சைவ வேளாண்குலத்தைச் சேர்ந்த 5ல் செவ்வாய் உள்ள கிரகபாவம் 29ம் ரேவதி நட்சத்திரம் 2ஆம் பாதத்தையுடைய 7-11-1965-ல் பிறந்த சைவ மணமகனுக்கு ஏற்ற மணமகளைத் தேடுகின்றோம். நேரடியாக அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திரு .V.A. சிவராசா சோதிடர் 152 Bஅரசடிறோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம. (6882)



## சட்ட விரோத மின் பாவனை

(ஊரெழு)


ஊரெழுப் பகுதியில் சட்ட விரோத மின்பாவனை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.இதனால் சப்பூர்வ மின்பாவனையாளர்கள் பெரிதும் சிரமங்களிற்கு ஆளாகி வருகின்றனர். (உ-95)



வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என்.சூரியகுமார்,மாகாண பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த எந்திரி .வி. சுதாகர் முல்லைத்தீவு பிரிவு எந்திரி. ஜீ.ஜே. ஜெவ்றி, வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் சிவநேசன்,முன்னாள் வடமாகாண பணிப்பாளர் எந்திரி எஸ். ஐ.ஆர்.குரூஸ் பிரதம பொறியியலாளர்சிறீனிவாசன்,வவுனியா பொறியயலாளர் சதீஸ் குமார் ஆகியோரை படத்தில் காணலாம் . (படம்: ஈச்சமோட்டை நிருபர்)



யாழ். பெரிய புலம் மகாவித்தியாலய தொடக்க நிலை மாணவர்களின் மெய் வன்மைப்போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம் (படம்: குருநகர் நிருபர்)



பாலர் கல்விச் கழகத்தின் 37 வது வருடாந்தக் கலை விழா அண்மையில் நடை பெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சோ.பத்மநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் பாலர் கல்விக்கழகத்தலைவர் எஸ்.பி. காசிநாதன் மற்றும கழக உறுப்பினர் சிலரையும் படத்தில் காணலாம்.

# வலு விழந்து நிறுவனங்களில் வாழ்வோர்க்கு உதவிய 'சுனேத்ரா பவுண்டேசனின்' பயிற்சிப் பாசறை

மனிதனானவன் உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும் எமது மூதாதையரின் வாக்குககூட 'ஊரோட ஒத்தோடு' என்பதாகும். இந்த வகையின் படி நிலையில் மனிதன் வாழ்ந்தாலும், மனிதர்கள், மனிதர்களிற் தங்கி வாழும் ஒருவகைச் சமூகம் உலகெங்கும் உள்ளது. அதில் எமது நாடு முன்னணியில்திகழ்கின்றது.ஏனெனில் யுத்த அழிவுகள், வன்முறைகள், மன நோய்கள் போன்ற நிகழ்வுகளினால் இது குழமபிப்போய் உள்ளது.ஆறாத மனவடுக்கள் இன்னும் நெஞ்சில் நிறைந்துள்ளன.வடகிழக்குப் பகுதியே முன்னணியில் உள்ளது. பிறக்கும்போதுகூடஅங்கவீனர்களாகப் பிறந்து மனிதர்களோடு தங்கியும், தாங்கியும் வாழும் மூன்றாம்படிச் சமூகம் இன்னொரு வகையில் உள்ளது. முதலாம்படிச் சமூகத்தை விடுவோம். இரண்டாம், மூன்றாம்படிச் சமூகத்தைப் பற்றி யாரும் சிந்தித்திருக்கிறார்களா எனக்கேட்டால் யாரும் பதில் தரப்போவ தில்லை. இவர்கள் அங்கவீனமானவர்கள் ,ஊனமுற்றோர், இயலாதவர்கள் என்ற பெயரில் தான் கூறுவார்கள். இப்படிப்பட்டவர்களை யாழில் ஒரு சில நிறுவனங்களும், துறவிகளும் பொறுப்பேற்று வாழ வழி அமைத்துக் கொடுக்கிறார்கள்.

### சுனேத்ரா பவுண்டேசன்

இந் நிறுவனங்களை உடுவில் ஆக், மருதனார் மடம்வாழ்வகம், கைதடி நவீல்ட், இணுவில் House of home போன்றவற் றில் வாழும் வலுவிழந்தோரை நம்பிக்கையூட்டும் வகையில்பங்குனிமாதம் பத்தாம் திகதியில் இருந்து பதினான்காம் திகதிவரை ஐந்துநாள் பயிற்சிப் பாசறை ஒன்றை கொழும்பில் உள்ள சுனேத்ரா பவுண்டேசன் என்ற நிறுவனம் முன்வந்து வழங்கியது. இந் நிறுவனத்தின் இயக்குநராக திருமதி சுனேத்ரா பண்டாரநாயக்கா என்ற பெண்மணி இருக்கின்றார். இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சகோதரியாவார். பயிற்சியாளர்களாக ஜேர்மனி நாட்டவரான வூல்வ், ரோகணதேவ தம்பதிகள் போன்றோரும்,வேறு சில சிங்களச்சகோதரர்

**திறனாய்வுக்களம்**

களும் உதவியாளர்களாக உள்ளனர். மேற்கூறப்பட்டநிறுவனத்தினருடன் பொதுவில், கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள வலுவிழந்தோர் சிலர் வந்திருந்தனர். இப்பயிற்சியில் 50 பேர்கள் ஈடுபட்டனர். யாழ்.திருமறைக்கலா மன்றக் கலைஞர்களும் இப்பயிற்சிக்கு ஆதரவை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட நிறுவனங்களின் ஆசிரியர்கள்,பொறுப்பாளர்கள், அருட்சகோதரிகள் போன்றோரும் பயிற்சியில் பங்குபற்றி தமது ஊக்கத்தையும் அளித்தார்கள். வலுவிழந்த பிள்ளைகள் யாவரும் வயது வேறுபாடு இன்றி ஐந்து நாட்களும் காலை 9மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தங்களை மறந்து சந்தோஷமாக ஈடுபட்டார்கள்.

### நம்பிக்கையும், திடமும் ஏற்பட்டன

இவர்களின் உள்ளங்களில் நாங்களும் வாழ்ந்து காட்டுவோம். எங்களிடமும் திறமை உண்டு என்ற நம்பிக்கையும், திடமும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. பிறந்து 3ஆம் மாதத்தில் முன்பாதத்தை ஷெல்லினால் இழந்த சிறுவன் ஒருவன் 5நிமிடம் ஆடிய ஆடல் எடுத்துக் காட்டாகும்.பாடல்கள், ஆடல்கள், நடிப்பு,ஒற்றுமையான உறவுப்பரிமாற்றம் வேறும் பல்வேறு நிகழ்வுகளை பயிற்சியாளர்கள் அளித்திருந்தார்கள்.போர்க்காலச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட எங்கள் பிரதேசத்திற்கு சுனேத்ரா பவுண்டேசன் நிறுவனம் மேற்கொண்ட பணி போற்றத்தக்கது. எமது மண்ணில் எந்த நிறுவனமாவது இந்த அளவிற்கு முன வந்து இப்படியான பயிற்சி ஒன்றினை வழங்கியிருந்ததை இவ்வளவு காலமும் காணமுடியவில்லை. அத்துடன் மேற்கொண்டதும் இல்லை. இந்த வகையில் இவ்வமைப்பின் இயக்குநர் 'நல்ல இதயம் உள்ள பெண்'என்று தான் கூறவேண்டும். தங்களின் பணியை இவ்வாறான மனிதர்களுக்கு ஆற்றியமை போற்றத்தக்க விடயமாகும்.

வலுவிழந்தோரை எவ்வாறு கையாள வேண்டும். அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு எவ்வாறு நடக்க வேண்டும் என்ற பயிற்சிசை பொறுப்பாசிரியர்கள்,பராமரிப்பாளர்களுக்கு வழங்கி இருந்தார்கள்.அருட்சகோதரிகள் இருவர் இப்பயிற்சியில் அவ்விடத்தில் பிள்ளைகளின் நலனுக்காகஅர்ப்பணித்து ஈடுபட்டதைக் காணமுடிந்தது.பயிற்சியாளர்களான வூலவ், ரோகணதேவ தம்பதிகள் ஆகியோர் கையாண்ட பயிற்சிமுறைகள் யாவ

**சுண்டுக்குளி கஜோல்**

ருக்கும் புதிதாக இருந்ததாகவும், தங்களுக்கு ஏற்ற வழிவகையில் இலகுவாகக் கையாண்டதாகவும் பயிற்சியைப்பெற்றோரின் கருத்துக் கூடக் கூறப்பட்டது. 5நாட்களும் பயிற்சியில் ஈடுபட்டு பிரிந்து பிள்ளைகள் போகும் போதுகூட மகிழ்ச்சியுடனும்,நம்பிக்கையுடனும் சென்றார்கள. இது யாழ்.மண்ணிற்கு கிடைத்த மகத்தான சந்தர்ப்பம் இலகுவில் யாரும் மறந்து விட முடியாதது. அதிலும் வலுவிழந்த பிள்ளைகள் மறக்கப் போவதில்லை என்பது உறுதி இனமத, மொழி கடந்த ஒரு சகோதரத் துவத்தை இவர்கள் ஏற்படுத்தியதுகூடசமாதானச் சூழ் நிலைக்கு உகந்ததே! □

# அரசு-புலிகளுடனானநெருக்கமானஉறவுமூலம் சமாதான வலுவுட்டல்பணியில் ஈடுபடுவோம்

## புலம்பெயர்தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனப் பணிப்பாளர் பிரன்சன் மக்கின்லீ

(தென்மராட்சி)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சமாதான நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கும்'புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனம்' ஆக்கபூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமான பிரன்சன் மககின்லீ நேற்றுக்காலை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அதன் யாழ்ப்பாணக் கிளைச் செயலகத்தை நாடா வெட்டித்திறந்து வைத்து உரையாற்றிய சமயம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இத்திறப்பு விழாவில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா, திட்டப் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி மற்றும் சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

பணிப்பாளர் நாயகம் பிரன்சன் மக்கின்லீ அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

எமது நிறுவனம் இலங்கைக்குப் புதியதாகும்.கடந்த மே மாதத்தில் தான் நாம் இலங்கையில் எமது முதலாவது செயலகத்தினை ஆரம்பித்துள்ளோம். கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்திற்கு முடிவு கட்டும் பொருட்டு ஏற்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளும் வலுவூட்டும்பணியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இவ்விடயத்தில் இலங்கை அரசுடனும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் நாம் நெருக்கமான உறவினை மேம்படுத்தி வருகின்றோம்.

ஐரோப்பிய நாடுகளிலும்,உள்நாட்டிலும் இடம் பெயர்ந்த நிலையில் வாழ்கின்ற இலங்கையர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு உதவுவது எமது நிறுவனத்தின் பணியாகும். வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் இளைஞர் -யுவதிகளின் கௌரவமான இருப்புக்கு நாம் உதவும் திட்டங்களை அமுல் செய்யவுள்ளோம்.

அதேசமயம், யாழ்ப்பாணக்குடா நாட்டில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்கின்ற குடும்பங்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லக்கூடிய ஒரு நிலைகளை அரசுடனும் புலிகளுடனும் இணைந்து செயற்படுத்துவோம்.

எமது செயற்பாடுகள் அடிப்படையில் இருந்தே மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கபபட்டுள்ள செயலகம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் இணைந்து செயல்படும். அத்தோடு இங்கு இடம் பெயர்ந்த நிலையில் வாழ்கின்ற குடும்பங்களின் தன்னார்வ நடவடிக்கைகளுக்கும் உதவுவோம் எனக் குறிப்பிட்டார்.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் கொழும்பு அலுவலகப் பொறுப்பாளரான திருமதி மேரி ஸீகான் அங்கு உரையாற்றும் போது,

இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் கடந்த 51 வருடங்களாக உலகில் பணியாற்றி வருகின்றது. சுமார்100 நாடுகளில் எமது நிறுவனம் அதன் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது.

மொத்தம் இதுவரை 160அலுவலகங்கள் இருக்கின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டசெயலகம் 161வது செயலகம்ஆகும்.

ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளில் இருக்கக்கூடிய இலங்கைத்தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அனுப்பப்படும் வாய்ப்புகள் ஏறபடலாம் என்று எடுகோளில் எமது நிறுவனத்தின் செயறபாடுகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியம் எம்மைக் கேட்டுக்கொண்டதன் பேரில் இச் செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் செயலகம் மூலம் உளளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களின் பிரச்சினை களுக்கும் தீர்வுகளைக் கண்டு இடம் பெயர்ந்தவர்கள் இங்கு கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த எமது நிறுவனம் பாடுபடும் எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பிரன்சன் மக்கின்லீ பத்திரிகையாளர்களுக்கு இந நிறுவனத்தின் நோக்கங்கள், செயற்பாடுகள் பற்றி விபரித்தார். (உ-77,43)

# நிலக்கண்ணி அகற்ற 40 பேருக்குப் பயிற்சி

(வவுனியா)

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் சுவிஸ்லாந்து நிறுவனம் வவுனியா மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடிகளைஅகற்றுவது தொடர்பாக அம் மாவட்டத்தில் 40 பேருக்கு பயிற்சி அளித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை பவ்வேறுஅமைப்புகள் அகற்றி வருவதுடன், அதற்கான பயிற்சியினையும் அளித்துவருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# யாழ். நகர மத்தியில் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## நூற்றுக்கணக்கினர் பங்கேற்பு

(தென்மராட்சி)

புதிய ஜனநாயகக்கட்சியின் ஏற்பாட்டில் நேற்றுமு.ப.11 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதிய ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்க.கதிர்காமநாதன் தலைமையில் நூற்றுக்கணககான கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டிருந்தனர். இவ ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டிருந்தவர்கள் சுலோகஅட்டைகளைத் தாங்கிப் பிடித்த வண்ணம் கோஷங்களை எழுப்பினர்.

* அமெரிக்க ஏகாதிபத்தியமே ஈராக் யுத்தத்தை உடன்நிறுத்து.

* எண்ணெயைக் கொள்ளையடிக்க ஈராக் மக்களைக் கொல்லாதே.

* இன்று ஈராக், நாளை இலங்கை.

* இன்று பக்தாத், நாளை யாழ்ப்பாணம்.

* எண்ணெயைக் கொள்ளை அடிக்க இரத்தத்தைக் குடிக்காதே.

ஆகிய கோஷங்கள் அங்கு ஓங்கி ஒலித்தன

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சிவப்பு நிறக் கொடிகளையும் தாங்கிப் பிடித்த வண்ணம நவீன சந்தையை அண்டிய மின்சார நிலைய வீதிப்பக்கமாக ஊர் வலமாக வந்து மத்திய பேருந்து நிலையத்தக்கு முன் பாகவுள்ள வீதியை சிலநிமிடநேரம் வழிமறித்து தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

மேறபடி கண்டன ஆர்ப்பாட்டத்தில பெரும் அளவு முஸ்லிம்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-77,4,7,43)

## குருபு,சை ஆராத்னை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 22வது ஆண்டு குருபூசை ஆராதனைவிழா எதிர்வரும் 9ஆம் தகதிபுதன்கிழமை மு.ப.10 மணிக்கு மேறபடி குருமூர்த்த ஆலயத்தில் நடை பெறவுள்ளன.

நண்பகல்மகேசுர பூசையும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-10)

## வருடப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் சுபானு வருடப்பிறப்பு விழா எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6மணி முதல் நடைபெறவுள்ளது.(உ-10)

## இந்திய மீனவரின் அத்து மீறல் தொடர்கிறது

(திருநெல்வேலி)

வடமராட்சி கடலில் நேற்று முன் தினமும் இந்திய மீனவர் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டனர் .

இதனால் இப்பகுதி மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாது திரும்பினர்.

இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல்கள் அண்மைக் காலமாக வடமராட்சி கடலில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-43)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால்ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் 'குறும் படங்களின் தொகுப்பு' நாளை ஞாயற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## பிரபல சிங்கள இசைக்கலைஞர் காலமானார்

கொழும்பு)

பிரபல சிங்கள இசைக் கலைஞரான குணதாச கப்புகே நேற்று முன்தினம் காலமானார்.

62 வயதான இவர் நேற்றுமுன் தினம் கட்டுநாயக்கா விமான நிலையததில் ஏற்பட்ட விபத்தில் படுகாயம் அடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.

நாடக, இசை, திரையிசை என்பவற்றில் பெயர்பெற்ற இவரிற்கு இலங்கையில் சிறந்த பாடகரிற்கான விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் திறப்பு

(தென்மராட்சி)

தேசிய சேமிப்பு வங்கியின் இரு கிளைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

மானிப்பாய்,திருநெல்வேலி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கிளைகளே அன்றைய தினம் தலைவர் டி.எம் சுவாமிநாதனால் திறந்துவைக்கப்படவுள்ளன.

கடந்த 1990ஆம் ஆண்டின் பின்பு இங்கு திறக்கப்படுகின்ற தேசிய சேமிப்பு வங்கிக் கிளைககள் இவையென்பதும்,இவை கணனிமயப்படுத்தப் பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-77,581)

## வாசிகசாலை பயன்பாடில்லை

(எழுதுமட்டுவாள்)

மிருசுவில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வாசிகசாலை கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

மேற்படி வாசிகசாலையானது படையினர் பாவனையில் இருந்ததும், கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே அவவிடத்தை விட்டுப் படையினர் அகனறதும் குறிப்பிடத்தக்கது. (உ-81)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதியாண்டு மாணவர்களுக்கான செயலமர்வுகள் இன்று முதல் எதிர்வரும்10ஆம்திகதிவரை கலாசாலையில் இடம்பெறவுள்ளன.

ஆரம்பக்கல்வி,கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளை மேற்கொள்ளும் ஆசிரிய மாணவர்களுக்கே இச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இறுதி நாளான 10 ஆம் திகதி கண்காட்சி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.(உ-7)

# பக்தாத் "சதாம் ஹுசைன்" விமான நிலையம் கூட்டுப்படைகளிடம் வீழ்ச்சியுற்றது

## மூர்க்கமான எதிர்ப்புகளுக்கிடையில் படை நகர்வு தொடர்கிறது

(கட்டார்)

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தின் பிரதான விமான நிலையம் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டு விட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன.

பக்தாத் நகரின் மத்தியிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சதாம் ஹுசைன் விமான நிலையத்தை கூட்டுப்படைகள் கைப்பற்றி விட்டதாக அறிவிக்கப்பட்ட அதேவேளை ஈராக்கிய அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர்.

சண்டை ஆரம்பமானதிலிருந்து3200 ஈராக்கிய துருப்புக்கள் கொல்லப்பட்டிருப்பதாக கூட்டுப்படை அதிகாரிகள் அறிவித்துள்ள அதேவேளை, 83 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக ஈராக்கியர் கூறியுள்ளனர்.

பக்தாத் விமான நிலையத்தைப் பாதுகாக்க மேலும் ஏராளமான ஈராக்கியப்படைகள் அங்கு போய்க் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### நகரம் இருளில் மூழ்கியது

பக்தாத் மீதானபோர் தொடங்கியதன் பின்னர் நேற்று இரவு முதல் தடவையாக பக்தாத் இருளில் மூழ்கியது. கூட்டுப்படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஈராக்கிய நகரை இருளில் ஆழ்த்தியதாகக் கருதப்பட்டது.

நேற்றிரவு முழுவதும் பக்தாத் நிலைகள் மீது கூட்டுப்படை விமானங்கள் கடுமையான தாக்குதல் நடத்தின. தாங்கிகளையும் விமானங்களையும் பாவித்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதிபர் சதாம் ஹுசைனின் பல மாளிகைகளும் தாக்குதலுக்குள்ளாகின. அதிபர் சதாம் ஹுசைன் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் அமைச்சர்களுடன் அவர் கலந்துரையாடுவது தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

பக்தாத்துக்குள் கூட்டுப்படைகள் நுழைய எத்தனித்தால் இழப்புகள் மிகப் பெரியதாகவும் பலத்த நஷ்டம் ஏற்படுத்துவதாகவும் இருக்கும் என்று ஈராக்கிய துணைப்பிரதமர் தாரிக் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியப் படைகள் இரவு முழுவதும் கடுமையாகச் சுட்டதாகவும் றொக்கெட் தாக்குதலில் 2 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.



ஆனால் பக்தாத் நகரின் தற்பாதுகாப்பிற்காக பெரிய அளவில் இராணுவ ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டதற்கான அறிகுறிகள் தெரியவில்லை என்று செய்திகள் வந்துள்ளன.

பக்தாத்தில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் ஆல்புட் பாலத்தை தத்தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர நடந்த சண்டையில் ஈராக்கியப் படை வீரர்கள் 500 பேர் கொல்லப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கியப் படைகள் காட்டும் எதிர்ப்பை, அதிபர் சதாம் ஹுசைன் சார்பாகப் பேசிய ஈராக்கிய செய்தி அமைச்சர் பாராட்டினார்.

வடக்கு ஈராக்கில் மொசுல் நகருக்குள் குர்து இன கொரில்லாக்களை நுழைய விடாமல் ஈராக்கியத் துருப்புகள் தடுத்து வருவதால் கடும் சண்டை மூண்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

முன்னேறும் அமெரிக்கக் கூட்டுப் படைகளை எதிர்கொள்ள ஈராக்கின் குடியரசு காவல்ப்படை செல்வதாக பி.பி.ஸி கூறியது.

### போரின் முக்கிய கட்டம்

ஈராக் மீதான அமெரிக்காவின் போர் முக்கிய கட்டத்தை நெருங்கி விட்டது. அமெரிக்கப் படையினர் பக்தாத் நகரில் தெற்கு முனையில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் நான்கு திசைகளில் இருந்தும் பக்தாத் மீது கடும் குண்டு வீச்சு நடந்து கொண்டிருக்கிறது.

அந்த நகரின் முக்கிய கட்டடங்கள் எல்லாம் குண்டு வீச்சில் நொருங்கிக் கொண்டிருக்கின்றன. நகரைப் பாதுகாத்து வந்த அதிபர் சதாம் ஹுசைனின் குடியரசுப்படையின் பெரும் பகுதி அழிக்கப்பட்டு விட்டது. எந்த நேரத்திலும் போரில் பெரிய திருப்பங்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கடைசியாகக கிடைத்த செய்திகள் கூறின. (பி-9)

# அமெரிக்கா என்ன உலக நீதிபதியா?

## சீனா கடும்சீற்றம்

(பெய்ஜிங்)

மனித உரிமையை அப்பட்டமாக மீறும் அமெரிக்கா உலக நாடுகளின் நீதிபதியா? என்று சீனா கடுமையாகத் தாக்கியுள்ளது.

சீனா உட்பட 190 வளரும் நாடுகளில் மனித உரிமை மீறப்படுவதாக அமெரிக்காவின் மனித உரிமை மீறல் 2002 அறிக்கையில் கூறப்பட்டுள்ளதற்குப் பதில் அளிக்கும் விதத்தில் சீனா இவ்வாறு கூறியுள்ளது.

மனித உரிமை மீறல் குறித்து கவலைப்படும் அமெரிக்கா, ஐ.நா. அனுமதியின்றி ஈராக் உட்பட சில அந்நிய நாடுகள் மீது தன்னிச்சையாக போர் தொடுத்துள்ளது என்று ஈராக் போருக்குப் பிறகு முதன் முதலில் எதிர்ப்புக் குரல் கொடுத்துள்ளது சீனா.

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவிலேயே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது என்று சீன அமைச்சரவைக் கவுன்சிலின் செயலகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.(பி)



# புதிய போர் உத்திகள் பற்றி சதாம் மந்திராலோசனை

(பக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனது சிரேஷ்ட அமைச்சர்களோடு மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்ததை ஈராக்கின் செய்மதித் தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒளிபரப்பியது.

ஈராக்கிய துணை ஜனாதிபதி பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்கள் ஆகியோரை இந்தக் கூட்டத்தில் காண முடிந்தது.

இந்தக் கூட்டம் எப்பொழுது நடைபெற்றது என்பது கூறப்படவில்லை. எனினும் ஈரக்கின் யுத்த முஸ்தீபுகள் பற்றி இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனது அமைச்சரவையுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை ஈராக்கின் உள்ளூர் தொலைக்காட்சிச் சேவை கடந்த புதன் கிழமை ஒளிபரப்பியிருந்தது. (பி-9)

## பாக்.தீவிரவாதிகளின் ஊடுருவல் பற்றிய

# ஆதாரம் பிரிட்டனிடம் உண்டு அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவி வருவதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் உலகப் பார்வை எனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேட்டி அளித்த பொழுதே ஜக்ஸ்ரோ இதனைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவி வருவது அதிகரித்து வருவதும் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களும் தங்களுக்குக் கவலை அளித்ததாலேயே அமெரிக்க இராஜாங்க அமைச்சரும் தானும் காம்டேவிற்றிலிருந்து கூட்டறிக்கை வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த ஊடுருவலை பாகிஸ்தான் கட்டுப்படுத்துவதோடு இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசியல் ரீதியான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் ஜக்ஸ்ரோ மேலும் தெரிவித்துள்ளார். (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்

## படகு கவிழ்ந்து 17பேர் மரணம்

(குஜராத்)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நர்மதா ஆற்றில் படகு ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த இந்து யாத்திரீகர்களில் 17பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

படகு கவிழ்ந்த சமயம் அதில் 42 யாத்திரீகர்கள் இருந்ததாகவும், 25 பேர் நீந்திக் கரை சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏனையோரைத் தேடும் பணிகள் தொடர்கின்றன. எனினும் அவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (பி-9)

## நித்திரையில் யு.எஸ் வீரருக்கு ஏற்பட்ட அனர்த்தம்

(வாஷிங்டன்)

ஈராக்கின் மத்திய பகுதியில் உள்ள குட்நகருக்கு அருகே நித்திரையில் இருந்த அமெரிக்கப் படைவீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் அவர் கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட துப்பாக்கிச் சூடு, கடற்படை வீரரின் நெஞ்சில் பட்டதாகவும், இதனால் அவர் அந்த இடத்திலேயே உயிர் இழந்ததாகவும் கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (பி-9)

## தீவிரவாதத் தலைவர் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

ஹிஸ்புல் முஜாகுதீன் அமைப்பின் முக்கிய தளபதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்த அமைப்பைச் சேர்ந்த தளபதியான சைபுல் இஸ்லாம் என்பவர் புதன்கிழமை இரவு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தியப் படையினருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே, சைபுல் இஸ்லாம் தங்கியிருந்த கிராமத்தைப் படையினர் சுற்றி வளைத்த பொழுது இருதரப்பினருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டது.இந்தச் சம்பவத்தில் சைபுல் இஸ்லாம் கொல்லப்பட அவருடன் தங்கியிருந்த மற்றொருவர் தப்பித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தங்கியிருந்த வீட்டில் இருந்து பெருந்தொகையான பணமும், சக்திவாய்ந்த தொடர்பு சாதனக்கருவிகளும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (பி-9)

# இஸ்ரேலியர் தாக்கி 7பலஸ்தீனர் படுகொலை

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கின் மேற்குக் கரை மற்றும் காஷா நிலப்பரப்பில் ஸ்ரேலியத் துருப்புக்கள் நேற்று முன்தினம் 7 பலஸதீனர்களைச் சுட்டுக் கொன்றார்கள்.

சர்வதேச கழகத்தின் பார்வை ஈராக் யுத்தத்தின் பக்கம் திரும்பியுள்ள நிலையில், இஸ்ரேல் இவ்வாறான முற்றுகையைத் தீவிரப்படுத்தியுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் குற்றம் சாட்டி உள்ளார்கள்.

எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இஸ்ரேல் கூறியது.

இந்த நிலையில் மத்திய கிழக்கில் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் பிரேஸிலில் வைத்துக் கூறியுள்ளார். (பி-9)

# பிலிப்பைன்ஸில் குண்டு வெடிப்பு 15 பேர் மரணம்:37பேர் காயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் உள்ள டாவோ நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றில் 15பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தென்பிலிப்பைன்ஸில் உள்ள டாவோ நகர விமான நிலையத்தில் தாக்குதல் நடந்து ஒரு மாத காலத்துக்குள் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 37பேர் காயமடைந்துள்ளார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மலேசியாவின் அனுசரணையுடன் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் மொரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிப்பது குறித்து ஒரு உடன்பாடு காணப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. ஆயினும் மொரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (பி-9)

# நஸிரியா பகுதியில் சகல பாலங்களும் யு.எஸ். படைவசம்

(பக்தாத்)

ஈராக்கின் முக்கிய நகரங்களில் ஒன்றான நசிரியாவில் உள்ள பாலங்கள் அனைத்தும் அமெரிக்க மரைன்ஸ் படைகளின் முழுக் கட்டுப்பாடடில் வியாழக்கிழமை வந்துவிட்டன.

இதனை அப்படைகளுடன் சென்றுள்ள ராய்டர் நிருபர் அட்ரியன் கிராப்ட் வியாழக்கிழமை உறுதி செய்தார்.

பக்தாத்துக்கு தெற்கில் 375 கி.மீ. தொலைவில் நசிரியா நகரம் அமைந்துள்ளது. சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான ஈராக் குடியரசு படையினரின் கடும் தாக்குதலை அமெரிக்க மரைன்ஸ் படைகள் வெற்றிகரமாக முறியடித்து நசிரியாவில் உள்ள பாலங்கள் அனைத்தையும் தமது வசம் கொண்டு வந்துவிட்டன.

அமெரிக்கப் படைகள் கைப்பற்றியுள்ள அனைத்து பாலங்களிலும் பாதுகாப்புக்கு வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். யூப்பிரட்டீஸ் நதிக்கு வடக்கில் அமைந்துள்ள ஒரு குடியிருப்புப் பகுதிக்கு மரைன்ஸ் படைகளுக்கு கடும் எதிர்ப்பு உள்ளது. அங்கு அவர்களால் செல்ல முடியவில்லை என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

சதாமுக்கு விசுவாசமான ஈராக் குடியரசுப் படையினர் அமெரிக்கப் படைகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது நசிரியாவிலிருந்து வெளியேறிவிட்டனர். ரோந்துப் பணியின் போது சிறிய அளவில் ஈராக் தரப்பிலிருந்து துப்பாக்கியால் சுட்டுத்தாக்குதல் நடந்தது. பெருமளவில் சண்டை ஏதும் நடைபெறவில்லை. தொடர்ந்து முன்னேறி வருகிறோம் என்று மரைன்ஸ் படை உயரதிகாரி ஒருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

### மின்சாரம் பாய்ந்து யு.எஸ். வீரர் பலி

நசிரியா நகரில் இராணுவ டிரக்கின் மீது அமர்ந்து சென்று கொண்டிருந்த அமெரிக்க மரைன்ஸ் படைவீரர் மீது தாழ்வாகத் தொங்கிய மின்சார வயர் கடந்த திங்கட்கிழமை மோதியது. இதில் அவர் மின்சாரம் பாய்ந்து இறந்தார் என்று கட்டாரில் இருந்து அமெரிக்க மத்திய கமாண்ட் வட்டாரங்கள் தெரிவித்தன. (பி)

## இன்று ஒரு தகவல்

# ஒவ்வொருவருக்கும் தேவை உண்மையான தேச பக்தி

ஒரு நண்பர் வந்தார். அவருக்குத்தேச பக்தி மிக அதிகம். தெய்வ பக்தியை விட தேசபக்திதான் முக்கியம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு இருப்பார், சொல்வது மாதிரி நடந்து கொள்வார் "உண்மையாகவே தேசபக்தியோடு உள்ளவர்களும் உண்டு தேசபக்தி இருப்பதாகக் காட்டிக் கொள்பவர்களும் உண்டு" என்று நான் ஒரு நாள் அவரிடம் சொன்னேன். உடனே அவர் எனக்கு ஒரு கதை சொன்னார். போலந்து தேசத்துக்குட்டிக்கதையாம் அது.

அந்த ஊரில் ஒரு பெரிய மனிதர் இருந்தாராம், மிகவும் வசதியான ஆள். வசதியில் ஒன்றும் குறைவு இல்லை. இருந்தாலும் அவருக்கு ஒரு தொந்தரவு. அதாவது பல்வலி. ஒரேயொரு பல் சூத்தை. மிகவும் கஷ்டமாக இருந்தது. என்ன பண்ணுவது? என்று யோசித்தார், உடனே வேலைக்காரனை அழைத்து, ஓடிப்போய் பல்வைத்தியரை அழைத்துக் கொண்டு வா என்றார். அவன் உடனே ஓடிப்போய் அழைத்துக் கொண்டு வந்தான்.

பல் வைத்தியர் வந்து சேர்ந்தார். யாரிடமும் பல்லைக் காட்டாத இவர் பல்லைக் காட்டினார். வைத்தியரிடம் காட்டித்தானே ஆகவேண்டும். அவர் அதைச் சோதித்துப் பார்த்தார். இதை எடுத்து விடுவது தான் நல்லது என்றார். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே இன்னொரு நாட்டு (ரஷ்யா) தளபதி ஒருவர் வாயில் பக்கம் இவரைத் தேடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே ஒரு ஆலோசனை பண்ணினார். அந்தப் பல் வைத்தியரைப் பார்த்து "வைத்தியரே! நீங்கள் கொஞ்சநேரம் அடுத்த அறையில் போய் இருந்து கொள்ளுங்கள் நான் கூப்பிடும் போது வரலாம்! எடுக்க வேண்டிய பல் இதுதான் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார். அவரும் சரி, என்று சொல்லிவிட்டு அடுத்த அறையில் போய் உட்கார்ந்து கொண்டார்.

அந்த அடுத்த நாட்டுத்தளபதி உள்ளே வந்தார். அவரைக் கூப்பிட்டு உட்காரவைத்துப் பேசிக் கொண்டிருந்தார் இவர். அப்போது இவர் சொன்னார், "நீங்கள் உங்கள் நாட்டில் எல்லாருக்கும் தேசபக்தி இருப்பதாகக் காட்டிக் கொள்கிறீர்கள். ஆனால் உங்களை விட எங்களுக்குத் தேசபக்தி அதிகம். அதை இப்பொழுது கூட என்னால் நிரூபிக்க முடியும்? என்றார். "எப்படி நிரூபிப்பீர்கள்?" என்று கேட்டார் அந்தத் தளபதி. "இதோ பாருங்கள்! எங்கள் தேசபக்தியைக் காட்டுவதற்காக நாங்கள் எதைவேண்டுமானாலும் தியாகம் பண்ணத் தயாராக இருக்கிறோம். உங்களால் செய்ய முடியாததைக் கூட நான் செய்து காட்டுவேன்" என்றார் இவர்.

"அடடே! அப்படியா! எங்கே செய்து காட்டுங்கள் பார்க்கலாம்" என்றார் அந்தத்தளபதி. உடனே அவர் அந்த பல்வைத்தியரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். பக்கத்து அறையிலிருந்து அவர் வந்து சேர்ந்தார். "இதோ பாருங்கள்... இப்பொழுது என்னுடைய தேசபக்தியைக் காட்டவிரும்புகிறேன். அதற்காக என்னுடைய பல்லில் ஒன்றைத் தியாகம் பண்ண விரும்புகிறேன். அதனால் என் பல்லில் ஒன்றை பிடுங்கி எடுத்து விடுங்கள்' என்றார். பல் வைத்தியர் புரிந்து கொண்டார். சரியாக அந்தச் சூத்தைப் பல்லை பிடுங்கி எடுத்து விட்டார்.

இதைப் பார்த்தவுடன் அடுத்த நாட்டுத் தளபதிக்கு ரோஷம் வந்துவிட்டது. நிமிர்ந்து பார்த்தார். இதோபாருங்கள். நானும் தேசபக்தியில் உங்களை விட ஒன்றும் குறைந்தவனல்ல. வைத்தியரே அவர் ஒரு பல்லைத்தானே தியாகம் பண்ணினார். நான் எங்கள் நாட்டுக்காக இரண்டு பற்களைத் தியாகம் பண்ணுகிறேன். என்னிடமிருந்து இரண்டு பற்களைப் பிடுங்கி எடுத்து விடுங்கள் என்றார்.

வைத்தியர் பார்த்தார், அவருக்கென்ன. அவருக்கா வலிக்கப் போகிறது? இருப்பதில் நல்ல பற்களாகப் பார்த்து இரண்டைப் பிடுங்கிப் போட்டுவிட்டார். "பார்த்தீர்களா எப்படி என்னுடைய தேசபக்தி?" என்று சொல்லிக் கொண்டே எழுந்து அந்தத் தளபதி புறப்பட்டுப்போய்விட்டார். இதுதான் அந்த நண்பர் சொன்ன குட்டிக் கதை.

யோசித்துப் பாருங்கள் தேசபக்தியை இப்படியா காட்டிக் கொள்வது? விளம்பரத்துக்காகக் காட்டப்படுகிற தேசபக்தி இப்படி வீணாகத்தான் போகும். உண்மையான தேச பக்தி இருந்தால் தான் சுதந்திரத்தின் அருமையை நாம் உணர முடியும். வெய்யிலின் அருமை நிழலில் தெரியும் என்பது மாதிரி ஜனநாயகத்தின் அருமை சர்வாதிகாரத்திலே தான் தெரியும். சர்வாதிகார நாட்டில் இருந்த ஒருவருக்குப் பல்வலி வந்துவிட்டதாம். உடனே அவர் அங்கேயிருந்து புறப்பட்டு ஒரு ஜனநாயக நாட்டுக்கு வந்து ஒரு பல் டாக்டரைப் பார்த்தாராம். எனக்கு வைத்தியம் பண்ணுங்கள் என்று கேட்டுக் கொண்டாராம். "ஏன் உங்கள் நாட்டில் பல் டாக்டர்கள் யாரும் இல்லையா? இதற்காகவா அங்கேயிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்? என்று டாக்டர் கேட்டிருக்கிறார். இவர் "எங்கள் நாட்டில் பல் டாக்டர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் அங்கே நாங்கள் எங்கள் வாயைத் திறப்பதற்கு அனுமதியில்லை. அதனாலே தான் இங்கே வந்தேன்" என்றாராம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கைச் சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் முழு ஆதரவு

## அமைச்சர் மிலிந்தவிடம் அதிகாரிகள் உறுதிப்பாடு

(கொழும்பு)

தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும்15 நாடுகள் அறிவித்துள்ளன.

அண்மையில் பெல்ஜியத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்தமொறகொட, ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

அப்போதே இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதாக 15 நாடுகளின் அதிகாரிகளும் உறுதியளித்துள்ளனர்.

இச் சந்திப்பின் போது, ஈராக்கிய யுத்தம் காரணமாக இலங்கையின் சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் பாதிப்படைய மாட்டாது என்றும் அதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக இருப்பதாகவும் உயர் அதிகாரி சொலானா உறுதிபடத் தெரிவித்துள்ளார். (உ-8)

# சமாதான முயற்சிகளில் புலிகளின் நிலைப்பாடு பாராட்டுக்குரியது

## சமாதான நோபல் பரிசாளர் புகழாரம்

(கிளிநொச்சி)

தற்போதைய சமாதான நடைமுறைகளை எடுத்துப் பார்க்கும் போது, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு வரவேற்கக் கூடியதொன்றாக உள்ளதுடன் அவர்கள போர்நிறுத்த நடைமுறைகளிலும் சரியான போக்கை கடைபிடிக்கிறார்கள்.

இவ்வாறு ஐரிஷ் நாட்டின் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியுப்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய பின் பத்திரிகையாளர்களை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், நான் ஸ்ரீலங்கா அரசின் சிறப்பு அழைப்பின் பேரிலேயே இங்கு வந்துள்ளேன்.

அத்துடன் வடஅயர்லாந்தின் சமாதான அனுபவங்களை இச்சந்திப்பில் பகிர்ந்து கொண்டேன்.

மேலும் போரினால் அல்லல்படும் மக்களுக்கு உறுதியான சமாதானத்தைத் பெற்றுக் கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

சமாதான வழிமுறைமூலம் எப்படிப்பட்ட பகைமை உணர்வையும் முடிவுக்கு கொண்டுவரமுடியும் என்பதை அனைவரும் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

அரசும் விடுதலைப்புலிகளும் வன்முறைகளை முற்றிலும் தவிர்த்துக கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காக சமாதானத்தை நிலைநாட்ட இருதரப்பினரும் உறுதியான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சமாதானச் சூழலை தக்க வைப்பதற்கு பரஸ்பர புரிந்துணர்வு என்பது முக்கிய அம்சமாக விளங்குகிறது.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக ஐரிஷ் குடியரசின் சமாதான வெற்றியைக் குறிப்பிடலாம்.

வடஅயர்லாந்தின் நிரந்தர உறுதிப்பாட்டோடு சமாதானம் நிலை நாட்டப்பட்டதன் காரணத்தினால் இன்று ஐரிஷ் மக்கள் ஒன்றுபட்டு ஐக்கியமாகவும் சுபட்சத்துடனும வாழ்கின்றனர்.

ஆகவே தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றி அளித்தால் சுயநிர்ணயத்துடன கூடிய தமிழ் சுயாட்சி அலகை கொண்டுவருவதற்கான வாய்ப்பு ஏற்படுமென நான் எதிர்பார்க்கிறேன் என்றார்.

பேச்சு வார்த்தை முடிவடைந்தவுடன் ஜோன்கியு தலைமையிலான குழுவினர், கிளிநொச்சி மத்திய கல்லூரி, புதிதாக அமைக்கப்படவுள்ள வைத்தியசாலை ஆகியவற்றை பார்வையிட்டபின் நேற்று முன்தினமே கொழும்பு திரும்பினர். (வ-10)

## இராசி பலன்

05.04.2003
(பங்குனி 22, சனி)
திருதியை காலை 7.18 வரை
பரணி காலை 6.34 வரை
இராகுகாலம் 9.09 - 10.39
சுபநேரம் 3.09 - 4.39
சதுர்த்தி விரதம், கார்த்திகை விரதம்

**மேடம்**
ஏந்தக் காரியத்திலும் தடை தாமதம், அதிக செலவு, மனச்சஞ்சலம், விவாதம்

**இடபம்**
அதிக யோசனை, கௌரவம், தொழில் முயற்சி, காரிய சித்தி

**மிதுனம்**
சோம்பல், ஒருவனுக்குகீழ்ப்படிதல், எடுத்தகாரியம் தாமதமாகும், சுபசெலவு

**கடகம்**
தன தானியப் பெருக்கு, நல்ல படுக்கை; குடும்ப சுகம், ஆனந்தம்

**சிங்கம்**
பெரியோரிடமிருந்து மரியாதை, நன்கொடை, ஆரோக்கியம், போசன சுகம்

**கன்னி**
சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, தேசாந்திர வாசம், உத்தியோகப் பங்கம்

**துலாம்**
அஜீரணக்கோளறு, பொருள் நாசம், மனக் கவலை, முயற்சி தாமதம்

**விருச்சிகம்**
சௌபாக்கியம், தொழில் நன்மை, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும்

**தனுசு**
தடைப்பட்ட காரியம் கைகூடும், சிநேகிதர் சந்திப்பு, விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு

**மகரம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார விருத்தி, காரிய தாமதம், போசனசுகம்

**கும்பம்**
புத்தி சஞ்சலம், மாதர் நட்பு, மாணவர் கல்வியில் ஆர்வம், பகைவர் நேசம்

**மீனம்**
சகோதரர் உதவி, காரிய நன்மை, தெய்வசிந்திதை, வாக்கு மேன்மை
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# விசாரணை நடத்தக் கோரி உயர் நீதிமன்றின் மனு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் தனககெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடுநிலையான விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சர், விமானநிலைய விமான சேவைகள் நிறுவனம், சட்டமா அதிபர் ஆகியோருக்கு உத்தரவிடுமாறு கோரி விமான நிலைய விமான சேவை நிறுவனத்தின் பணிப்பாளர் காமினி அபெயரத்ன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மார்ச் மாதம் 5 ஆம்திகதி தன் மீது பாரதுாரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஜனாதிபதி குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் எழுதியிருந்தார். தனக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறும் அதில் கேட்டிருந்தார். சமாதான தூதுக்குழுவினருக்கென்றே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விமானத்தில், புலி உறுப்பினர்கள பூவண்ணன், எழில் ஆகியோரை தாய்லாந்திற்கு அனுப்பியிருந்ததாகவும், புலிகளின் சமாதான செயலகத்தின் செயலாளர் புலித்தேவனை அபெயரத்னவின் உத்தியோக பூர்வ விடுதியில் தங்கவைத்ததாகவும், சுங்கப் பரிசோதனையின்றி 36 பொதிகளை கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்ததாகவும், ஜனாதிபதியின் கடிதத்தில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவை பற்றி விசாரிப்பதற்கு நடுநிலையான விசாரணை யொன்றை நடத்துமாறு அபெயரத்ன கேட்டுள்ளார்.

இதேவேளை, அபெயரத்ன ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை கொலை செய்வதற்கு 1994ம் ஆண்டு முயறசித்தாரென்ற குற்றச்சாட்டின் பெயரில் சீ.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டவராவர். (இ)

# கடமை தவறும் அரச ஊழியர்கள் விடயத்தில் கடுமையான நடைமுறை

(கொழும்பு)

கடமை நேரத்தில் அலுவலகத்தில் பணியாற்றாது தமது சொந்த வேலைகளிலும், வேறு வெளி வேலைகளிலும் ஈடுபட்டுவரும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல மாவட்டச செயலாளர்களுக்கும், அரச திணைக்கள் கூட்டுத்தாபனங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு கடமைகளை நிறைவேற்றத் தவறும் அதிகாரிகள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம் எனவும் அச்சுற்றறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (உ-8)

## சுகாதாரக் கருத்தரங்கு

(அராலி)

வட்டுக்கோட்டை தெற்கு காந்திஜீ சனசமூக நிலையத்தில் இன்று, சுகாதாரமும் நோய்த் தடுப்பும் பற்றிய கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இப்பகுதி சுகாதாரப் பிரிவினர் இதனை ஒழுங்கு செய்துள்ளனர். (உ-214)

### லங்கா முடித்த மீது தாக்குதல்!

# கண்காணிப்புக் குழுவின் அறிக்கைக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

லங்கா முடித்தக்கப்பல் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை முரண்பாடானதாகும்.

அத்தாக்குதல் விவகாரத்தில் விடுதலைப்புலிகளை சந்தேகிப்பதற்கு காரணமெதுவுமில்லை என்று கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது. இத்தாக்குதல் நடைபெற்றபோது கண்காணிப்புக குழு உறுப்பினர்களும் கப்பலில் இருந்துள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீ.ல.சு.கட்சி ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும்,

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் இன்னும் ஒரு அறிக்கையும் வெளியிடவில்லை. கடற்படைக் கப்பல்கள் மீது பல தடவைகள் புலிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

மேற்படி தாக்குதல், புலிகளின் ஆயுதக்கப்பல் அண்மையில் கடலினுல் மூழ்கடிக்கப்பட்டமைக்கு பழிவாங்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகிறோம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் போது புலிகள் அடிக்கடி தாக்குதல் களை நடத்திக் கொண்டிருப்பது பாரதூரமானதும் கருத்தில் கொள்ளப்படவேண்டியதுமாகும்.

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ஒவ்வொரு சம்பவமும் பாதுகாப்புப் படைகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதையே காட்டுகின்றன. இதனால் தேசியப் பாதுகாப்பிற்கும் பெரும் ஆபத்து ஏற்படக்கூடும்.

தேசியப் பாதுகாப்பை உருவாக்க வேண்டுமென்றும், பாதுகாப்பு படையதிகாரிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் எல்லோரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

சீன மீன்பிடிப்படகு மீதும், லங்காமுடித்த மீதும் தாம்தாக்குதல் நடத்தவில்லை என்ற புலிகளின் கூற்றை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், அதற்கான குற்றச்சாட்டுக்களை இன்னுமொரு தமிழ்குழுவுக்கு சூட்டுவதையும் நாம் கண்டிக்கின்றோம் என்றுள்ளது. (உ)

## சீருடைத் துணி விநியோகம்

(அராலி)

வலிமேற்குப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணி சங்கானை ப.நோ.கூ.சங்கத் தலைமைக் காரியாலய புடவை விற்பனைப் பகுதியில் வைத்து விநியோகிக்கப் படுவதாகவும், முத்திரையைச் சமர்ப்பித்து சீருடைத் துணியைப் பெற்றுக் கொள்ளுமாறும் இதுவரை அதனைப் பெறத் தவறியவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. (உ-214)

## பஸ் கம்பனிகளின் பங்கு விற்பனை உடன்படிக்கை ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

ஆறு பஸ்கம்பனிகளின் 39 சதவீத பங்குகளை ஐ.பி.ஐ. எஸ். நிறுவனத்துக்கு விற்பதற்கான உடன்படிக்கையினை ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அமைச்சரவையைப் பணித்துள்ளார்.

அமைச்சரவை அங்கீகாரமின்றி கைச்சாத்திடப்பட்ட மேற்படி முகாமைத்துவ உடன்படிக்கை என்பதையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ் உடன்படிக்கை தொடர்பான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருப்பதுடன்,

ஐ.பி.ஐ. எஸ். நிறுவனத்துக்கு பஸ் கம்பனிகளின் பங்குகளை விற்பதை மீண்டும் முதற்கட்டத்தில் இருந்து ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, மீண்டும் கூறுவிலை கோரிமுறையான நடவடிககைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அமைச்சரவையை கோரியுள்ளார். (உ-8)

## புகையிரதப் பயண ஆணைச்சீட்டை ஏற்க மறுப்பு அரச ஊழியர்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், புகையிரதப் பயண ஆணைச்சீட்டுடன் வவுனியா ரயில் நிலையத்திற்கு சென்று ஏமாற்றமடைந்து பின்னர் பணம் செலுத்திப் பிரயாணச் சீட்டைப் பெற்றுச் செல்ல வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள் புகையிரத பயணச் சீட்டுடன் ரயில் நிலையத்திற்கு சென்று அதைக் கொடுத்து பிரயாணச் சீட்டைக் கேட்கும் போது, பயணச் சீட்டில் உள்ள சுட்டெண் றப்பர் முத்திரையினால் நிரபபப்பட வேண்டும். அது தவறின் பயணச்சீட்டு வழங்கப்படமுடியாது என அங்கிருக்கும் உதவிப் புகையிரத நிலைய அதிபர் தெரிவித்துவருகிறார்.

அத்துடன், இது பற்றி திணைக்களங்களுக்கு சுற்று நிருபம் அனுப்பப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறதாம்.

இதேவேளை, இது தொடர்பான எந்தச் சுற்று நிருபமும் தமக்கு கிடைக்கவில்லையென சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-52)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலயத்தில் மண்டைதீவு றோ.க. பாடசாலை, மணடைதீவு மகா வித்தியாலயம், அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாகவும் தகுதியானவர்கள் இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப பணிப்பாளர் பொ. வேணுகோபால் கேட்டுள்ளார். (உ-10)


### பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மகேந்திரன் பெண் றமணி,
364 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல. மணநீக்கம் /360 எதிராக

சோமசுந்தரம் மகேந்திரன்,
இல. 1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு 2003ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளி பிரசன்னமாயிருக்க வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு. இ. ஜெயசிங்கத்தின் நலனை அவதானிப்பதற்காக சட்டத்தரணி திருமதி. லிங்கா துரைராஜா அவர்கள் மன்றில் சமூகமாயிருந்து மன்றின் கட்டளைப்படி வழக்காளி விளம்பர அத்தாட்சியை இன்று அணைக்கின்றார் என்றும் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு திகதியிடப்பட்டதற்கு அமைய மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தினை நெறிப்படுத்திய பின்னர் மன்று வழக்காளியின் பிராது அணைக்கப்பட்ட வ1 ஆவணம் மன்றுக்கு அளிக்கப்பட்ட சாட்சியம் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற தகுதியுடையவரெனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1988ம் ஆண்டு வைகாசி மாதம் 7ம் திகதி நிறைவேறிய விவாகப் பதிவை எதிராளி வழக்காளியை விட்டுப் பிரிந்து ஆக்க வன்ம உறவறுப்பு செய்து வாழ்வதால் இத்தால் வெற்றும் வெறிதுமானதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1990 ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி பிறந்த ஆண் குழந்தை விதுஷன்ராஜ்ஜின் பாதுகாப்பை வழக்காளி கொண்டிருக்கலாமென இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதியை எதிராளி கடைசியாக வசித்த இடத்தில் ஒட்டியும், வலம்புரி தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தியும் எதிராளி மூன்று மாதங்களுக்குள் இந்நீதிமன்றத்தில் தோன்றி இப்பின்னுறுதித் தீர்வைக்கு எதிராக ஏதாவது காரணங்கள் காட்டப்பட்டிராவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென் இத்தால் கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2003ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி

வரைந்தது
இ. ஜெயசிங்கம்
வழக்காளியின் சட்டத்தரணி.

இ.த. விக்னராஜா
மாவட்ட நீதிபதி.

மன்றின் கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6884)


## வருடாந்த உற்சவம்

(அராலி)

அராலி மத்தி உலோலை சிட்டி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

10 தினங்கள் இடம்பெறவுளள இவ்ஆலய உற்சவத்தில் தேர், தீர்த்தத் திருவிழாக்கள் முறையே எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-214)

***

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ வாராகி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ விழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய தேர், தீர்த்தம், பூங்கவன உற்சவங்கள் முறையே 14,15,16 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (உ-10)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் கல்லூரி தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் எஸ். பத்மநாதன தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம்பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-52)

## தடகள விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையோன தடகள விளையாட்டு விழா பிரதேச செயலர் கே. கனகரத்தினம் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகவும், விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ52)




### யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் ஆலய மஹோற்சவம் - 2003

06-04-2003 (ஞாயிறு) நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றம்.
13-04-2003 (ஞாயிறு) மாலை 6.00மணிக்கு சப்பறம்
14-04-2003 (திங்கள்) காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழா
15-04-2003 (செவ்வாய்) காலை 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா

மஹோற்சவக் குருக்கள் :

சிவஸ்ரீ நா. யோகேஸ்வரக் குருக்கள்

உற்சவ காலத்தில் தினமும் மாலை 7.15 மணிக்கு அருட்சொல்வார் சைவப்புலவர் திரு. செ. கந்தசத்தியதாசன் B. A (Hons)Dip.in Edu அவர்கள் விநாயக புராணம் என்னும் பொருளில் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

விளம்பர அனுசரணை :

அரவிந்த் வீடியோ அன் போட்டோ

326, நாவலர் வீதி, ஆனைப்பந்தி



### GTZ - Jaffna Rehabilitation Project

We wish to inform the General Public, Partner Organisations both in the Govemment and private Sectors, Beneficiaries and relevant authorities that our office has been moved to a new premises with effect from 12th March 2003,

*Our new office is at No. 472, Main Street, Jaffna*

Telephone No : 021 - 2222635 Fax : 021 - 2222238
021 - 2226011

March 28, 2003 Field Team Leader 472, Main Street,
GTZ - JRP. Jaffna.

### ஜீ. ரீ. சற் ~ யாழ் புனர்நிர்மாண திட்டம்

பொது மக்களுக்கும், எம்முடன் சேர்ந்து பணியாற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், ஏனைய சார்புடைய அலுவலர்கள், பயனாளிகள் சகலருக்கும் எமது நிறுவனத்தின் யாழ். அலுவலகம் புதிய விலாசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

எமது புதிய அலுவலக விலாசம்


: 472,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021-2222635 தொலை நகல்: 021-2222238
021-2226011

வெளிக்கள குழுத்தலைவர் 472, பிரதான வீதி,
ஜீ.ரீ.சற். யாழ். புனர்நிர்மாண திட்டம் யாழ்ப்பாணம்.

(C/5961)


ஈராக் இரசாயன தாக்குதலை நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் முன்னெச்சரிக்கையாக கவச உடையுடன் காணப்படும் அமெரிக்க வீரர்கள் டாங்கிகளில் கர்பாலா நகரைச் சுற்றி ரோந்து வருகின்றனர்


ஈராக் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்க டாங்கித் துருப்புகள்


பொகோட்டாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன் அமெரிக்க தேசிய க்கொடியை எரிக்கும் மாணவர்கள்.


வான்வழித் தாக்குதலில் பக்தாத் நகரில் உள்ள சதாமின் மாளிகையை தாக்கும் ஏவுகணை.


ஈராக்கில் நசிரியா நகருக்கு மேற்கே 150 கிலோ மீற்றர் தூரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவ பொலிஸ்.


அமெரிக்காவின் எச்சரிக்கையை அடுத்து லொஸ் ஏஞ்ஜலஸ் சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இராணுவ வீரர்கள்.

# பிரசவ ஆஸ்பத்திரி மீதான தாக்குதல் செய்தியில் தவறு

(கட்டார்)

பக்தாத்திலுள்ள பிரசவ ஆஸ்பத்திரி ஒன்றின் மீது கூட்டுப்படை குண்டு வீசியதில் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டு விட்டதாக கடந்த புதன்கிழமை வெளியான செய்தியில் எதுவித உண்மையுமில்லை என்பது இப்பொழுது தெரிய வந்துள்ளது.

இந்த ஆஸ்பத்திரி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியால் நடத்தப்படுகின்றது. ஆஸ்பத்திரியின் மீது குண்டு விழுந்து கட்டடம் சேதமான போது அவ்வேளையில் அங்கு எவரும் இல்லாததனால் யாரும் கொல்லப்படவில்லையென்று ஐ.சி.ஆர்.சி அறிவித்துள்ளது.

அவ்வழியாக சென்ற பாதசாரிகள் சிலர் கொல்லப்பட்டதாக வேறு செய்திகள் கூறின.

ஈராக் தலைநகர் மீது குண்டு வீசும் பொது இலக்குகள் சரியாக குறிவைக்கப்படுகின்றனவாவென்றும் சாதாரண மக்கள் கொல்லப்படாலும் அவர்களின் பொருள்கள் நாசமாக்கப்படாமலிருக்கவும் மிகுந்த கவனம் செலுத்தப்படுவதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். (பி)

# பக்தாத்தைப் பிடிக்கவும் காப்பாற்றவும் உக்கிர போர்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தை பிடிக்கும் முயற்சியில் அமெரிக்க-இங்கிலாந்து கூட்டணிப்படைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இந்தக் கூட்டணிப் படைகளை பக்தாத் நகருக்குள் நெருங்க விடாமல் ஈராக் படைகள் கடும் போரிட்டு வருகின்றன.

பேரழிவு ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறி அந்நாட்டின் மீது ஐ.நா. சபையின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக கடந்த மாதம் 20 ஆம் திகதி அமெரிக்கா ஈராக் மீது போரைத் தொடக்கியது. இந்தப் போர் நேற்று 15 வது நாளாக நீடித்தது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அரண்மனைகள், மாளிகைகள், அரச அலுவலகங்கள், இராணுவ மையங்கள் ஆகியவற்றை குறி வைத்து அவற்றின் மீது ஏவுகணைகளையும் குண்டுகளையும் வீசிய அமெரிக்கா, ஈராக் குடியிருப்பு பகுதிகள் மீதும் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் சதாம் ஹுசைனின் அரண்மனைகள் உட்பட பல்வேறு கட்டடங்கள் சேதமடைந்தன.

இதற்கிடையே பக்தாத் நகரில் உள்ள ஈராக் குடியரசுப் படைகள் நவீன எந்திரி துப்பாக்கிகள் மற்றும் விமான எதிர்ப்பு பீரங்கிகளுடன் அமெரிக்க இராணுவத்தை சந்திக்கத் தயாராகி வருகிறது.

அமெரிக்க விமானங்கள் நடத்திய தொடர் குண்டு வீச்சினால் பக்தாத், பாஸ்ரா மற்றும் கர்பாலா, நசிரியா ஆகிய நகரங்கள் பலத்த சேதமடைந்தன.

ஈராக் வீரர்கள் நடத்திய எதிர்த் தாக்குதலில் அமெரிக்க போர் விமானம் மற்றும் ஒரு ஹெலிகொப்டர் ஆகியவை சுட்டு வீழ்த்தப்பட்டன.

இருந்த போதிலும் அமெரிக்கா மற்றும் கூட்டணிப்படைகள் பக்தாத்தை நோக்கி தொடர்ந்து முன்னேறி வருகின்றன. (பி)

# செல்போன்களை ஒப்படைக்க உத்தரவு

(பக்தாத்)


செல்போன்களை உடனே ஒப்படையுங்கள். தவறினால் தண்டனைக்கு ஆளாவீர்கள் என நாட்டு மக்களுக்கு ஈராக் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.


ஈராக் மீது அமெரிக்கா கடந்த 15 நாட்களாக கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது. போர் விமானங்கள் மூலம் சரமாரியாக குண்டுகளை வீசியும், ஏவுகணைகளை வீசியும் ஈராக் நகரங்களை அதிர வைத்து வருகின்றன. போதாக்குறைக்கு தரைப்படை தாக்குதலும் உக்கிரமடைந்து வருகின்றது. இதனால் போர் உச்சக் கட்ட நிலையை எட்டியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஈராக் அரசு தனது நாட்டு மக்களுக்கு திடீரென ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது நாட்டு மக்கள் அனைவரும் தங்களிடம் உள்ள செல்போன்களை உடனடியாக ஒப்படைக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளது. இது குறித்து ஈராக் அரசின் செய்தித் தொடர்பாளர் தொலைக்காட்சியில் கூறியதாவது,

ஈராக்கில் அனைத்துச் சேட்டிலைட் தொடர்பு கருவிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் அப்படியிருந்தும் பல ஈராக்கியர்கள் இன்னும் இதுபோன்ற கருவிகளை வைத்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் உடனடியாக தங்களிடம் உள்ள செல்போன்களை ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைக்கும் ஒவ்வொரு போனுக்காகவும் ஒரு ரசீது வழங்கப்படும். அதை வைத்து போருக்குப் பிறகு இந்தப் போன்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் திருப்பி கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.


இது போன்ற கருவிகளை வைத்து அமெரிக்க, இங்கிலாந்துப் படையினர் இலக்கை குறி வைத்து குண்டு வீசி தாக்குவதற்கு ஏஜெண்டுகள் வழிகாட்டி வருகின்றனர். மேலும் பல சட்டவிரோத செயல்களுக்கும் அதைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (பி)


யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கத் தரப்பினரின் யுத்த டாங்கி.


காயமடைந்த கடற்படை வீரர்களையும் பிடிபட்ட இரகசிய வீரர்களையும் கொண்டு செல்லும் அமெரிக்க கடற்படையின் பிளாக் ஹாக் ஹெலிகொப்டர்


காயமடைந்த சக வீரர்களையும் பிடிபட்ட ஈராக்கிய வீரர்களையும் ஏற்றிச் செல்லும் பிளாக் ஹாக் ஹெலிகொப்ரர்.


குர்து இனத்தவர் கட்டுப்பாட்டில் உள்ள அர்பில் என்ற இடத்தின் அருகில் விமானப் படைத் தளத்தில் வந்திறங்கிய அமெரிக்க இராணுவத்தினர்.


பாஸ்ரா நகர் அருகே அணிவகுத்து நிற்கும் இங்கிலாந்து இராணுவ படையின் டாங்கிகள்.


பாஸ்ராவில் அமெரிக்க கூட்டுப் படைகளால் அழிக்கப்பட்டு கேட்பாரற்றுக் கிடக்கும் ஈராக்கிய இராணுவ டாங்கி.


ஈராக் படையுடனான போருக்குப் பின் ஓய்வெடுக்கும் இங்கிலாந்து இராணுவ டாங்கி ஊழியர்கள்


தெற்கு ஈராக்கில் பற்றி எரியும் எண்ணெய்க் கிணறுகளின் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள்.

# ஆட்சி மாறினும் பேச்சுத் தொடரும் ஜனாதிபதியின் நிலைப்பாடு இதுவே

## பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெளிவு படுத்துகை

(கொழும்பு)

ஆட்சி மாறினாலும் புலிகள் இயக்கத்துடனான பேச்சு வார்த்தை தடையின்றி முன்னெடுக்கப்படும். அரசும் புலிகளும் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட அடிப்படையான விடயங்கள் முறையான திருத்தங்களுடன் பேச்சு வார்த்தையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஆனால் அரசாங்கத் தரப்பில் இப்பொழுது பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளே எதிர்காலத்திலும் கலந்து கொள்வார்களா? என்பதை இப்பொழுது கூற முடியாது என ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிர்வாகம் கூடிய விரைவில் மாற்றமடையுமா? அதனை மாற்ற ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறாரா? என்ற பத்திரிகையாளரின் வினாவுக்குப் பதிலளித்த ஹரிம் பீரிஸ்,

இந்த அரசாங்கம் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களுடன் மட்டுமே பாராளுமன்றத்தை நிர்வகித்து வருகிறது. பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வரும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டுள்ளது. புலிகள் இயக்கமும் ஆட்சி மாற்றம் குறித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆகையால், ஆட்சி மாற்றம் குறித்து ஜனாதிபதியும் சிந்திப்பது புதுமையல்ல என்று குறிப்பிட்டார்.

மேலும் கருத்துக் கூறுகையில்,

இணங்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்த்தை தொடரும். ஆனால் இந்த அரசாங்கம் விட்ட தவறை புதிய அரசாங்கம் செய்யாது. திருத்தங்களுடன் பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்லப்படும் என்று கூறமுடியாது. அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் அடங்கிய குழுவொன்றே புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஜனாதிபதி விரும்புகிறார்.

ஆகையால் தான் பேச்சு வார்த்தைக் குழுவில் தனது பிரதிநிதியும் உள்ளடங்க வேண்டும் என அவர் விரும்புகிறார் என்றார்.

பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கமும் புலிகள் இயக்கமும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை நாம் திருத்தியமைக்கும் படி கூறவில்லை. அதனை முழுமையாக அமுல் படுத்தும் படியே நாம் கேட்கிறோம்.

திருமலை கடற்பகுதியில் வைத்து சீன மீனவர்களின் மீன் பிடிப்படகு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழு அளித்த தீர்ப்புக் குறித்து ஜனாதிபதி கூடிய விரைவில் தனது கருத்தை வெளியிடுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# அமெரிக்க உதவியை இலங்கை நாடியது

(கொழும்பு)

ஈராக் உட்பட மத்திய கிழக்கில் உள்ள நாடுகளுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதிலுள்ள பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் அமெரிக்காவின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

யுத்த சூழலில் அகப்பட்டுக் கொண்டுள்ள நாடுகளுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் பற்றியும், தேயிலையை அமெரிக்கா கொள்வனவு செய்வதிலுள்ள வாய்ப்புகள் பற்றியும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவுடன் அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் பேச்சு நடத்தியுள்ளார்.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இலங்கைத் தேயிலையைப் பெரும் தொகையில் கொள்வனவு செய்யும் நாடான ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்யும் சூழல் இல்லாது போயுள்ளது.

இதனால் கொழும்புத் தேயிலை விற்பனை விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

இந்நிலையில் அமைச்சர் கிரியல்ல, தூதுவர் அஷ்லி வில்ஸ் உடன் விரிவான உரையாடலை நடத்தியிருப்பதுடன் தேயிலைக் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அமெரிக்க அரசாங்கம் இதில் தலையிட்டு உதவவேண்டுமென்றும் கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, ஈராக்கிற்கு மனிதாபிமான உதவி என்ற வகையில் ஒரு கணிசமானளவு தேயிலையை இலங்கை வழங்கவிருக்கிறது. சண்டை காரணமாக குவைத் நாட்டிற்கான தேயிலை ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்

(பளை)

இராணுவக் கட்டுப்பாடற்ற பளைப் பகுதியில் சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிலையத்தை மக்கள் பேராளர் மா.பூபாலசிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பிரதமஎழுதுநர் சி.சிவப்பிரகாசம், பளைப்பிரதேச தபாலதிபர் வி.யோகேஸ்வரன் ஆகியோரும் மற்றும் பளைநகர் காவல் பணிமனைப் பொறுப்பாளர், பளை நகர தமிழீழ வைப்பக முகாமையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-97)

## அதிபர்கள் கூட்டம்

(நெடுந்தீவு)

பாடசாலைத் தகவல் தளம் தொடர்பான படிவங்கள் பூர்த்தி செய்வது சம்பந்தமான தீவகப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் தீவக வலய கல்விப் பணிமனையில் இடம்பெறவுள்ளதாக தீவகதிட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-126)

## கையெழுத்துப் பெறுவது பிற்போடப்பட்டுள்ளது

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக இன்று சனிக்கிழமை செயலக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கிராம அலுவலர் அலுவலகங்களில் கையெழுத்துப் பெறுவது என கிராம அலுவலர்களால் அறிவிக்கப்பட்ட நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. இது பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (த)

## தபால்அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பூநகரி செட்டியா குறிச்சி உப-தபால் நிலையத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்க வைக்குமாறு இப்பகுதி மக்கள் தபால் அமைசரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறியமையை அடுத்தே தபால் அமைச்சரிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-52)

# சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபு,சைத் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 96ஆவது குருபூசைத் தினத்தை ஒட்டி புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், வடமராட்சிப் பகுதிப் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, மனனப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

***பேச்சு*** (பாலர் கீழ்பிரிவு)

கே.கிருசாயினி- வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா
சி.நிதூஷா- சதாவதானி கதிரவேற்பிள்ளை பாலர் பாடசாலை
ர.ரஜிந்தா- வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா

**மனனம** (பாலர் கீழ்ப்பிரிவு)

கே.கிருசாயினி- வத்தனை மழலைகள் கல்விப்பூங்கா
பு.தேனுகா- ஞானசம்பந்தர் கலைமன்றம்
கு.துஷ்யந்தி- சதாவதானி கதிரவேற்பிள்ளை பாலர் பாடசாலை

***பேச்சு*** (பாலர் மேற்பிரிவு)

சி.துர்க்கா- சைவமன்றம் முன்பள்ளி- ஆத்தியடி
கெ.விபிஷா- சைவமன்றம் முன்பள்ளி- ஆத்தியடி
சி.வைதேகி- சதாவதானி கதிரவேற்பிள்ளை பாலர் பாடசாலை

**மனனம்** (பாலர் மேற்பிரிவு)

ரா.லோஜிதன்- கோல்டன் பிளாஸ் பாலர் பாடசாலை- ஓடக்கரை
சு.ஆதீஷன்- கமலாசினி பாலர் பாடசாலை
சி.சஜிஷ்ணவன்- தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலை

***பேச்சு*** (தரம்1)

க.பிரசாந்தி- யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்
இ.டனுசியா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சூ.புவிதா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை

**மனனம்** (தரம் 1)

பி.சுஜீவா- யா/ஞானாசாரியார் கல்லூரி
ந.விதூஷன்- யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்
ம.மதன்ராஜ்- யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

***பேச்சு*** (தரம் 2)

ப.கௌசிகா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
கே.கிருஸ்திகா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
இ.மதூஷன்- யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்

**மனனம்** (தரம் 2)

ஜெ.கபிலானந்- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
க.ஜெனித்தா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பா.மயூரிகா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

***பேச்சு*** (தரம் 3)

சு.சுகிர்தா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
இ.பிரியங்கா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சு.சுலக்ஷன்- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை

**மனனம்** (தரம் 3)

ம.கஜேந்திரன்- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சு.சுலக்ஷன்- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சு.சுகிர்தா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
இ.பிரியங்கா- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை

**பண்ணிசை** (தரம் 3)

ம.கஜேந்திரன்- யா/தம்பசெட்டி மெ.மி.த.கபாடசாலை
ந.விதுஷா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
த.தாரணி- யா/விக்னேஸ்வராக் கல்லூரி

***பேச்சு*** (தரம் 4)

பா.நிவேதினி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சி.மயூரி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
சு.சுபஹரி- யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**மனனம்** (தரம் 4)

ப.நிஷாந்தி- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பா.நிவேதினி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
செ.நளினா- யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

**பண்ணிசை** (தரம் 4)

சி.ஜீவநதிகா- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கு.சுகீர்த்தனா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
ப.அனுந்திதா- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
ந.சுனித்தா- யா/விக்னேஸ்வராக் கல்லூரி

***பேச்சு*** (தரம் 5)

பு.ஆரணி- யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்
தி.ரஜிதா- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
இ.கம்சவதனி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை

**மனனம்** (தரம் 5)

இ.கம்சவதனி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
செ.தர்சிகா- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
நே.அதித்யா- யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
வ.மிதுர்சனா- யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

**பண்ணிசை** (தரம் 5)

க.தேன்மொழி-யா/விக்னேஸ்வராக் கல்லூரி
இ.கம்சவதனி- யா/தம்பசெட்டி மெ.மி.த.க. பாடசாலை
நா.தேனுகா- யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

***பேச்சு*** (தரம் 6)

அ.அருள்நிலா- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
சி.கஸ்தூரி- யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
க.கௌதமி- யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
ச.சாஜிஜனனி- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி


**மனனம்** (தரம் 6)

பொ.அபிதா- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
ம.சிந்துஜா- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
சி.கஸ்தூரி- யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை


**பண்ணிசை** (தரம் 6)

யோ.அஞ்சலா- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
சு.விசாகர்- யா/ஹாட்லிக் கல்லூரி
ம.கார்த்திகா- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

(உ)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது பளை அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.வின்சன் தேசியக் கொடி ஏற்றி வைப்பதைப் படத்தில் காணலாம்.



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினர் அகில இலங்கை ரீதியில் நடாத்திய பொது அறிவுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவி ஒருவருக்கு பண்பாட்டு இயக்கத்தின் பொருளாளர் கவிஞர் செ.பரமநாதன் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*நல்லினத்து னூங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூம் இல்*
*—குறள்—*

# வலம்புரி

## பெற்றோர்களே ஜாக்கிரதை!

ஓரினத்தின் அடையாளமாக இருப்பது அவ்வினத்தின் பண்பாட்டு விழுமியங்கள் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இங்கு பண்பாட்டு விழுமியங்களே இனத்தின் பெருமைக்கு அடிப்படையாக அமைகிறது. பண்பாட்டு விழுமியங்களை ஓரினம் தொலைத்துவிடுமாக இருந்தால் அவ்வினம் நெறி தவறிய பாதையில் பயணிக்க வேண்டிய தேவை இருக்கும் என்பது அறிஞர்கள் கண்ட முடிபு.

இவ்வாறு ஓரினம் தனது பண்பாட்டு விழுமியங்களை தொலைத்து விடுவதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாக அமைகிறது. இதில் குறிப்பாக உள்நாட்டு யுத்தங்களும் புலப்பெயர்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன..

அவ்வகையில், கடந்த 20 வருட காலமாக யுத்தத்தை அனுபவித்து வரும் வடக்குக் கிழக்கு வாழ் தமிழினத்தின் பண்பாட்டு விழுமியங்களில் பிறழ்வு ஏற்பட்டுள்ளதென்பது வெளிப்படையான உண்மை. யுத்த அனர்த்தங்களினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், குடும்பக் கட்டுமானக் குலைவுகளும் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீதான கண்காணிப்பை மெல்லமெல்ல இளக்கி விடநேரிட்டது. இதன் விளைவாக மாணவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் கிடைத்தது.

இது மிக இறுக்கமான ஒழுக்க நெறிகளைக் கொண்டிருந்த தமிழினத்திற்குப பேரிடியாக அமைந்து விட்டது. இதன் காரணமாக இன்றைய இளம் சமூகத்தவரின் செயற்பாடுகள் வேதனை கொள்ள வைக்கிறது.

வீதிகள் மற்றும் சந்திகளில் கூடி நிற்கின்ற இளைஞர்கள், பாடசாலைக்குச் செல்கின்ற மாணவிகள் மற்றும் இளம் யுவதிகளுடன் விடும் சேஷ்டைகள் எல்லை கடந்து போவதைக் காண முடிகிறது.

கட்டிளமைப் பருவத்திலிருக்கும் இளைஞன் ஒருவன் தனது பருவத்தில் இளம் பெண்களுடன் எப்படியும் சேஷ்டை விடலாம். அதனை சமூகம் கண்டுகொள்ளக் கூடாது. அவ்வாறு சமூகம் விழித்தெழுந்து கேள்வி கேட்குமாக இருந்தால், அதனை முடக்க வேண்டும் என்ற உணர்வோடு செயற்படுவதைக் காண முடிகிறது.

இளைஞர்களின் இத்தகைய உணர்வலைகள் கோஷ்டி மோதல்களுக்கும் அழிவுகளுக்கும் வித்திட்டுள்ளது. இதேவேளை இத்தகைய உணர்வலைகள் பாலியல் வல்லுறவுகளுக்கும், விரசமான நடத்தைகளுக்கும் வழிசமைத்து விடுகிறது.

இது விடயத்தில் பெற்றோர்கள் தொடர்ந்தும் மௌனமாக இருப்பார்களாயின் நிலைமை மிக மோசமானதாக அமைந்துவிடும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் நடத்தையை மிக அவதானமாகக் கண்காணிப்பதுடன் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

# ஈராக்போரை நிறுத்துவதற்கு ஐ.நா.சபையால் முடியுமா?

ஈராக்கில் நடைபெறும் போர் நிறுத்தப்படவேண்டும் என மேலும் பல நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. இப்போர் நிற்க வழி இருக்கிறதா? ஏட்டளவில் பார்த்தால் வழி இருக்கிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூடி இப்போர் உடனே நிறுத்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டால் போர் நிறுத்தப்பட்டாக வேண்டும் உண்மையில் அதற்கு வழி உள்ளதா?

இதை ஆராயும் முன்னர் நாம் பழைய கதையை சற்று கவனிக்க வேண்டும். 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் திகதி குவைத் மீது ஈராக் படையெடுத்தது. ஈராக்கின் இந்த ஆக்கிரமிப்புச் செயல் குறித்து ஐ.நா.விடம் குவைத் புகார் செய்யவே ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உடனே கூடியது.

உலகில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு இக்கவுன்சிலுக்கு உண்டு. அவசியமானால் ஐ.நா. சார்பில் படை திரட்டி ஆக்கிரமிப்பை அகற்ற இக்கவுன்சிலுக்கு அதிகாரம் உள்ளது.

ஆகவே குவைத் அளித்த புகாரின் பேரில் கூடிய ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் ஈராக்கை "ஆக்கிரமிப்பு செய்த நாடாக" அறிவித்தது. ஐ.நா சார்பில் படை திரட்டி ஈராக் மீது போர் தொடுப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை அப்போது இக்கவுன்சிலில் உறுப்பினராக இருந்த சின்னஞ்சிறிய நாடான ஜேர்மன் மட்டுமே எதிர்த்தது. ரஷ்யா, சீனா போன்ற பல நாடுகளை அமெரிக்கா சரிக்கட்டி இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி செய்தது. தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு வெவ்வேறு வகையில் பலன் கிடைத்தது. தீர்மானத்தை எதிர்த்த ஜேர்மனுக்கு பல கோடி டொலர் உதவி நிறுத்தப்பட்டது. சவூதி அரேபியாவில் "டர்மிட்" அடிப்படையில் வேலை பார்த்த 8 இலட்சம் ஜேர்மனியர் வெளியேற்றப்பட்டனர்.

அப்போதைய போரில் ஈராக்கியப் படைகள் குவைத்திலிருந்து வெளியேற்றப்பட்டன. ஈராக்கின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஐ.நா. படைகள் பேர்ரிட்டதாக வருணிக்கப்பட்ட போதிலும் 92 சதவீதப் படைகள் அமெரிக்கப் படைகளே. 42 நாளில் போர் முடிந்தது. அப்போது அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நுழையவில்லை.

ஆக்கிரமிப்புச் செய்த "குற்றவாளி" என ஈராக் மீது அப்போது குறிப்பிட்ட முத்திரை அழிந்துவிடாமல் அமெரிக்கா பார்த்துக் கொண்டது. ஈராக்கின் பொருளாதாரம் முடிகிற அளவுக்கு அதன் மீது ஐ.நா. அங்கீகாரத்துடன் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அது மட்டுமல்ல ஈராக்கின் தென்பகுதியிலும், வடபகுதியிலும் உள்ள ஷியாக்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக கூறி 1991 இலிருந்து ஈராக்கின் வட தென் பகுதிகள் மீது தொடர்ந்து விமான மூலம் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடந்து வந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானத்தில் இதற்கு அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும் தங்களுக்கு அப்படிப்பட்ட உரிமை உள்ளதாகக் கூறி அமெரிக்காவும், பிரிட்டனும் கடந்த 12 ஆண்டுகளாக அவ்வப்போது விமானத்தாக்குதல் நடத்தி வந்துள்ளன.

ஈராக் 1990 ஆம் ஆண்டில் குவைத் நாடு ஒன்றின் மீது தான் ஆக்கிரமிப்பு நடத்தியது. இத்துடன் ஒப்பிட்டால் 2ஆம் உலகப் போரின் போது ஹிட்லர் தலைமையிலான ஜேர்மன் படைகள் பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ஆஸ்திரியா, ரஷ்யா எனப் பல நாடுகள் மீது ஆக்கிரமிப்பு நடத்தின. ஆனால் 1942 இல் போர் முடிந்த சில ஆண்டுகளில் ஜேர்மனி மன்னிக்கப்பட்டு ஜேர்மனியில் அமெரிக்கா கோடிக் கணக்கில் டொலர் களைக் கொண்டு கொட்டியது.

இத்துடன் ஒப்பிட்டால் 12 ஆண்டுகள் ஆகியும் ஈராக் "குற்றவாளி" பட்டியலிலிருந்து அகற்றப்படாதது புதிராக உள்ளது.

"உலக அமைதிக்கு ஈராக் ஆபத்தாக உள்ள நாடு" எனறு அந் நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் அங்கீகார முத்திரையுடன் போர் நடத்த விரும்பிய அமெரிக்கா அக்கவுன்சிலில் கடந்த மாதம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றது. பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் எதிர்த்ததால் அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படாமலேயே ஈராக் மீது "சட்ட விரோதமான" முறையில் அமெரிக்காவும் பிரிட்டனும் போரைத் தொடங்கியுள்ளன.

இந்த இரு நாடுகளும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக ஐ.நா. கவுன்சிலில் ஈராக் புகார் செய்யலாமே என்று கேட்கலாம். இது நியாயமான கேள்வியே.

1945ஆம் ஆண்டில் ஐ.நா.சபை தோற்றுவிக்கப்பட்ட போது ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலும் தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் கவுன்சிலில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டன. இக்கவுன்சிலில் நிறைவேற்றப்படுகிற எந்தவொரு தீர்மானத்தையும் இந்த ஐந்து நாடுகளில் ஒன்று எதிர்த்து வாக்களித்தாலும் போதும் அந்தத் தீர்மானம் "ரத்து" ஆகிவிடும். இப்படியான உரிமையை இந்த ஐந்து வல்லரசு நாடுகளும் தங்களுக்கு வழங்கிக் கொண்டன.

ஐ.நா.கவுன்சிலில் அவ்வப்போது 2 ஆண்டுக் காலத்துக்கு தற்காலிக உறுப்பினராக இடம் பெறுகிற நாடுகளுக்கு இவ்வித "ரத்து" அதிகாரம் கிடையாது. இப்போது இக்கவுன்சிலின் 15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த நிலையில் ஈராக்கில் நடத்துகிற போரை நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து 13 நாடுகள் சேர்ந்து அதை நிறைவேற்றினாலும் பலன் இல்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் எதிர்த்து வாக்களித்து இத்தீர்மானத்தை ரத்துச் செய்துவிடும்.

**என்.ராமதுரை**

உலகில் அமைதியைக் காக்க வேண்டிய பொறுப்புகொண்ட இக்கவுன்சிலில் ஜனநாயகத்துக்கு இடமில்லை.

ஆனால் இப்போது ஈராக்கில் "ஜனநாயகத்தை" ஏற்படுத்துவதற்காககத் தான் அமெரிக்கா, பிரிட்டிஷ் படைகள் பக்தாத் நகரை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றன. (பி)

# போருக்குப் பின் ஈராக்கில் மக்கள் ஆட்சி ஏற்படுமா?

ஈராக்அமெரிக்கக் கூட்டுப்படைகளிடம் வீழ்ச்சியுறுவது ஏறத்தாழ நிச்சயமாகிவிட்டதாக யுத்த முனைகளிலிருந்து வந்துகொண்டிருக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

கூட்டுப்படைகள் வான் வழியாக நடத்திவந்த விமான குண்டுவீச்சு, ஏவுகணை வீச்சுக்களின் தாக்கம் அதிகரிக்கப்பட்டதோடு தரைவழி படைநகர்த்தலையும் தீவிரப்படுத்தியதால் மிக மூர்க்கமாகப் போரிட்டு வந்த சதாமின் குடியரசுப் படை அணிகளையும் தகர்க்க முடியாதுள்ளது.

பக்தாத்தைப் பிடித்துவிட்டால் நாட்டின் ஏனைய பகுதிகள் தாமாகவே வீழ்ந்து விடும் என்று கருதப்பட்ட அதேவேளையில் பக்தாத் மீது மட்டுமன்றி ஏனைய முக்கிய நகரங்கள் மீதான தாக்குதல் களையும் கூட்டுப்படைகள் தளர்த்திவிடவில்லை. அதனால் முன்னேறும் கூட்டுப்படைகளை எதிர்த்து பல்வேறு முனைகளிலும் ஈராக்கிய படைகள் போராட வேண்டியிருந்தது.

கூட்டுப்படைகள் முன்னேறும் வழிகளில் அவர்களை வழிமறித்து போரிட்ட குடியரசுப் படைகளை அவர்கள் வேகமாக ஊடறுத்துக் கொண்டு முன்னேறியுள்ளனர்.

தற்பொழுது பக்தாத் நகரை மிக அண்மித்த நிலையில் கூட்டுப்படைகள் வியூகம் அமைத்திருப்பதாகக் கருதப்படும் அதே சமயம் ஈராக்கின் ஏனைய பகுதிகளிலும் போர் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

குவைத்திலிருந்து உம் கஸார் வழியாக அல்குட் நோக்கி சென்ற படைகள் பக்தாத்தை அண்மித்திருக்கின்றன. அதேவேளை . கர்பாலா நோக்கிச் சென்ற படைகள் கர்பாலாவுக்கும் அருகிலுள்ள பெருங்குளத்துக்குமிடையிலான குறுகிய பாதை வழியாக முன்னேறியுள்ளன.

பல இடங்களிலும் மூர்க்கமாகப் போரிட்டு வந்த குடியரசுப் படைகளைத் தாம் முறியடித்து விட்டதாக அமெரிக்க மெரைன் படைகள் கூறிக் கொண்டாலும் குடியரசுப் படைகளில் பலரும் பக்தாத்தில் வீதிச் சண்டைகளில் ஈடுபடுவதற்காக பின்வாங்கிச் சென்றிருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

கூட்டுப்படை அணிகள் பக்தாத்தின் எல்லையை அடைந்து விட்ட நிலையில் அடுத்த கட்ட செயல்பாடு என்னவாக இருக்கும் என்ற கேள்வி பல பகுதிகளிலும் எழுப்பப்பட்டு வருகின்றது.

### அடுத்த வியூகத்துக்காக ஆலோசனை

அதிபர் சதாம் ஹுசைன் தமது அடுத்த இராணுவ வியூகத்தை வகுப்பதற்காக தமது அமைச்சர்களுடன் மந்திராலோசனை நடத்துவது உளளூர் தொலைக்காட்சியில் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது எடுக்கப்பட்ட படம் என்பது தெரிவிக்கப் படவில்லை.

ஈராக்கிய மக்களின் போர் உணர்வு மழுங்காமல் இருக்க செய்வதற்கான ஒரு உத்தியாக இந்தப்படம் காட்டப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

கூட்டுப்படைகள் பக்தாத் நகருக்குள் நுழையும் போது கடுமையான எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டியிருக்கும் என்பது முன்னரே தெரிந்த விடயம் தான். என்றாலும் கூட்டுப்படைகளின் விமான ஹெலிகொப்டர் அணிகள் தரைப்படையினரின் விரைவான முன்னேற்றத்துக்கு உதவக் கூடும் என்று நம்பப்படுகின்றது.

மிகப்பெரிய தாக்குதலால் சின்னாபின்னமாகிப் போன பக்தாத் நகரம் முழுவதும் ஒரே பீதியும், பதட்டமும் தான் நிலவி வருகின்றது. சதாம் ஹுசைன் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? என்பது தெரியவில்லை என்றும் அவர் நடப்பு செய்திகளோடு தொலைகாட்சியில் தோன்றினால் தான் அவர் உயிரோடு இருக்கிறார் என்பதை நம்ப முடியும் என்றும் அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தும் காட்சி ஒன்றை ஈராக் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

அமெரிக்க போர் விமானங்களின் குண்டு வீச்சில் செஞ்சிலுவை சங்கத்தின் குழந்தைகள் மருத்துவமனை ஒன்றும் தகர்க்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஏராளமான குழந்தைகள் உயிரிழந்து இருக்கலாம் என்று ஈராக்கிலுள்ள செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் கூறினர்.

கடுமையான குண்டுவீச்சு தாக்குதலில் பக்தாத் நகரம் பலத்த சேதமடைந்துள்ளது.

இதற்கிடையில் தெற்குப் பக்கமாக இருந்து பக்தாத் நகரை நோக்கி முன்னேறிச் செல்லும் அமெரிக்க-இங்கிலாந்துப் கூட்டணிப் படைகள் பக்தாத் நகருக்கு 10 கி.மீ. தூரத்தில் முன்னேறிச் செல்கின்றனர்.

### இறுதிக் கட்டப்போர்

ஏராளமான டாங்கிகள், கவச வாகனங்கள் மூலமாக நஜ்ஜாப் நகரை கடந்து பக்தாத் நகரை நெருங்கியுள்ள அமெரிக்க கூட்டணிப் படையினரை பக்தாத் நகருக்குள் நுழைய விடாமல் தடுக்கும் சதாம் ஹுசைனின் விசுவாசப் படையான குடியரசுப் படை பக்தாத் நகரின் தென்பகுதியில் குவிக்கப் பட்டுள்ளது. பக்தாத் நகரின் தெற்குப் பகுதியில் தான் பக்தாத் சர்வதேச விமான நிலையம் இருக்கின்றது. எனவே அந்தப் பகுதி மிக முக்கியமான பகுதியாக கருதப்படுகின்றது. இதனால் விமான நிலையத்தை பாதுகாக்கவும், அமெரிக்கப் படைகளை விரட்டவும் ஈராக் குடியரசுப் படையினர் அதிக அளவில் அந்த பகுதியில் திரண்டுள்ளனர்.

ஆனால் அவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பது தெரியவில்லை.

நேற்று மாலை பக்தாத் நகருக்கு 10 கி.மீ. தொலைவில் அமெரிக்கப் படையினர் முன்னேறி வந்த போது அவர்களை நோக்கி ஈராக்கிய படையினர் கடுமையான தாக்குதல் நடத்தினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. பீரங்கிச் சத்தம் பக்தாத் நகரை அதிரவைத்தது. (பி)

## திசைரி தியானம்

### சொற்கள்

ஒரு பக்தனின் உணர்வுகளைப் புண்படுத்தும் எந்தச் சொல்லையும் சொல்லாதீர்கள். பிறர் முழுக்க முழுக்க மோசமான நிலையிலிருந்தாலும் உங்களுடைய ஒவ்வொரு சொல்லும் இனிமை பயப்பதாக இருத்தல் வேண்டும். பிறரைப் புண்படுத்தும் சொற்களைச் சொல்லாமல் இருத்தலை வழக்கமாய்க் கொள்ளுங்கள். பிறர்க்கு ஒரு போதும் குற்றம் இழைக்காதீர்கள். நீங்கள் எப்போதும் வருந்த நேரிடாது. மற்றவர்களால் நேசிக்கப்படுவீர்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

**"என் கடவுளாகிய ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன்"**

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த கிரேக்கர் மற்றும் ரோமானிய அறிஞர்கள் தங்கள் சிந்தனையில் உருவானவற்றை மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நசரேத்தூர் இயேசு இதயத்தில் புதைந்து கிடந்த ஏக்கங்களை வெளிப்படுத்தி மக்களின் ஏக்கங்களை வெளிவரச் செய்த பெரும் பேச்சாளர். வார்த்தைகளும் வாயும் இருப்பதனால் பேசுகிறோம் என்றிராமல் கேட்பவர்களின் எண்ணங்களைத் தூண்டும் வகையிலும் அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் வகையிலும் நம் பேச்சு அமைய வேண்டும். "இவரைப் போன்று யாரும் என்றுமே பேசியதில்லை" என்று நம்மையும் பிறர் சொல்லக் கேட்க வேண்டும். நாம் பேசும் ஒவ்வொரு பயனற்ற சொல்லுக்கும் தீர்வை நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை மனதில் ஏந்தியவர்களாகப் பேசுவோம்.

**காவலன்**

# அமெரிக்க தாக்குதலை கண்டித்து திருமலையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போரினைக் கண்டித்து திருகோணமலையில் ஹர்த்தாலும் ஈராக் மக்களினை பாதுகாக்க வேண்டி பகிரங்க தொழுகையும் இடம் பெற்றது.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பெரிய முற்றவெளி மைதானத்தில் கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் தொழுகையின் பின்னர் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் உயிரிழந்த ஈராக்கிய மக்களின்ஆத்மா சாந்திக்காக ஜனாசா தொழுகையையும் நடாத்தினர்.

தொடர்ந்து தொழுகையில் ஈடுபட்டவர்கள் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.என்.தௌபீக் ஜனாத் மெனறுத் திருகோணமலை மாவட்டப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் ஜனாத் ஜெருவாத்தீன் ஆகியோரின் வழிகாட்டலில் அமெரிக்காவிற் கெதிரான சுலோகங்களினைத் தாங்கிய வண்ணம் நகர் வலமாகச் சென்று அமெரிக்க அதிபர ஜோர்ச் டபிள்யூ புஷ்ஷின கொடும்பாவியினையும் அமெரிக்கத் தேசியக் கொடியினையும் முற்றவெளியில் எரித்துள்ளனர்.

இறுதியாக திருகோணமலை பிரதேசசெயலகத்திற்கு சென்று திருமலைப்பிரதேச செயலாளரிடம் ஈராக்கிற்கான ஆதரவைத் தெரிவித்தும் அமெரிக்காவிற்கு தமது கணடனத்தை தெரிவித்தும் அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்துள்ளனர். (இ)

# படையினர் பாவித்த 8 வீடுகள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் சந்திப் பகுதியில் தாம் பயன்படுத்தி வந்த தனியாருக்குச் சொந்தமான 8 வீடுகளை கடந்த மாதம் 7 மற்றும் 22 ஆம் திகதிகளில் உரியவர்களிடம் ஒப்படைத்திருப்பதாக யாழ். பாதுகாப்புத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்.சிவனேஸ்வரராஜா. சி.லகஸ்மன்,கே.நாகம்மா, எஸ்-கந்தசாமி.ச.கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகளே இவ்விதம் கையளிக்கப்பட்டுள்ளன. (உ)

# ஆலயங்களுக்கான நிதி உதவி நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் யாழ்.மாவட்டத்திலுள்ள 174 இந்து ஆலயங்களுக்கும், சமய நிறுவனங்களுக்கும் மற்றும கழகங்களுக்கும் காசோலைகளை வழங்கவுள்ளார்.

காசோலை வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

காசோலைகளைப் பெறவருவோர் ஆலயம் அல்லது சமய நிறுவனத தின் கடிதத் தலைப்பு,அலுவலக றப்பர் முத்திரை,அடையாள அட்டை, ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப் பட்ட கடிதம் என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்கப் பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி நிகழ்வைத தொடர்ந்து உலக இந்து மாநாடு தொடர்பாக இந்து சமய சிவாச்சாரியார்களுடனும்,இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகிகளுடனும், சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுடனும் பி.ப.4மணிக்கு அமைச்சர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

இந் நிகழ்வுகளை ஒட்டி பி.ப.2 மணிக்கு முன்னதாக கலாசார உத்தியோகத்தர்கள் அனைவரையும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்திற்கு வருகை தருமாறும் அமைச்சர் கேட்டுள்ளார். (த)


## யாழ்ப்பாண மாநகர சபை

### சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கேற்ற வீடு தேவை

மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமாக செயற்படுவதற்கு நல்லூர் மற்றும் சுண்டிக்குளிப் பகுதிகளில் 06 அறைகளுக்குக்- குறையாததும் குடிநீர் மற்றும் மலசல வசதிகளைக் கொண்டதும்,நல்ல நிலையிலுள்ளதுமான சாதாரண அல்லது மாடி வீடு ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது.

மேற் குறித்த அறைகள் மற்றும் வசதிகளைக் கொண்ட வீட்டினை மாநகர சபைக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர் தமது வீட்டின் விஸ்தீரணம்,அறைகளின் எண்ணிக்கை மற்றும் அமைவிடம்,உரிமையாளரின் பெயர் போன்ற விபரங்களுடன் எதிர்வரும் 16.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும் வாடகையே மாதாந்தம் சபையினால் செலுத்தப்படும்.

இ.இராமலிங்கம்
மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.
(C/5964)

## நாடக ஆற்றுகையுடான மிதிவெடி விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கான இணைப்பாளர் தேவை

பின்வரும் தகுதிகளுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ நாடகத் துறைசார்ந்த அனுபவம்
★ ஆங்கிலத்தில் எழுதும்,சரளமாக பேசும்திறன்
★ கணனி அறிவு
★ மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கான அனுமதிப் பத்திரம்

மாதாந்த வேதனம் - 6000/-
வயதெல்லை - 20-30
விண்ணப்ப முடிவுத் திகதி - 10.04.2003
விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடம்/அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106,4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (C/5963)
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்


# மிதிவெடியில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நாவற்குழியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கராஜா கனோஜன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

வெற்றுக்காணி ஒன்றில் கல்லால் எறிந்து விளையாடிக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இவ்வெற்றுக் காணியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் எச்சரிக்கைப் பலகை போடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(இ-5,7)

# விளக்க மறியல் உத்தரவு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நித்திரையில் இருந்த மனைவியை கோடரியால் கொத்திக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்து தடுத்து வைக்கப் பட்டுள்ள அவரது கணவரான மரிஸ்ரன் பாலாவை எதிர்வரும் 17ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை மாவட்ட நீதிவான் வி.பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றைய தினம், மேற்படி படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே நீதிவான் விளக்க மறியல் உத்தரவை நீடித்தார்.

நேற்றைய விசாரணையின் போது மேற்படி படுகொலை தொடர்பாக சாட்சிகளிடமிருந்து சாட்சியங்கள் பெறப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.

கொலைச் சந்தேக நபரை எதிர்வரும் 8ந் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றில் மீண்டும் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 24ந் திகதி நள்ளிரவு இக் கொலைச் சம்பவம் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-4)

# பிரதேச செயலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு ஒரு கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சாதகமான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 75 இலட்சம் ரூபாவும், கரவெட்டி பிரதேச செயலகம், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றுக்கும் கட்டடத்திற்கான நிதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5,52)

# விடுமுறை நாட்களில் கடை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களும் இன்று தொடக்கம் எதிர்வரும் 13ம் திகதி வரை சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரம் செய்யலாமென யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

அதன் பின்னர் வழமை போல் விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைப் பூட்டி ஒத்துழைப்பு வழங்கும் படியும், மேற்குறிப்பிட்ட தினத்தில் வரும் விடுமுறை தினத்தில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ5,4)

வலம்புரி-சங்குநாதஏற்பாட்டில்

# எழுத்தாளர் சபை இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி-சங்குநாதம் நடாத்தும் எழுத்தாளர் சபை அங்குரார்ப்பண வைபவம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் மூத்த இலக்கிய கர்த்தா பேராசிரியர் சிவஞானசுந்தரம்(நந்தி)பிரதம விருந்தினராகவும் யாழ்.ரெலிக்கொம் பிராந்தியமுகாமையாளர் என்.சரவணபவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அருட்திரு.ரூபன் மரியாம் பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் வழங்குவர் சிறப்புரையை மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) நிகழ்த்துவார். இன்று அங்குரார்ப்பணம செய்து வைக்கப்படவுள்ள எழுத்தாளர் சபையில் நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் அங்கம் பெறவுள்ளனர். (த)

**பயங்கர...**

பாரிய உயிரிழப்புக்களை அமெரிக்கக் கூட்டணிப் படைகள் எதிர் நோக்க வேண்டி வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க இறுதி நேரத்தில் இரசாயன ஆயுதங்களை ஈராக் பாவிக்கலாம் என யுத்த அவதானிகள் ஆரூடம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று மட்டும் 2500க்கும் மேற்பட்ட ஈராக்கிய படை வீரர்கள் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்துள்ளதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

**அமைச்சர்...**

தரப்பு ஆயுதக் குழுவின் பெயரைக் குறிப்பிட வேணடும் மென்று கேட்டுக் கொண்டார்.

உலக சந்தையில் எரிபொருளின விலைகள் குறைந்துள்ள போதும் அரசாங்கம் இன்னமும் எரிபொருளின் விலையைக குறைக்கவில்லை என்றும் சரத் அமுனுகம குற்றம் சாட்டியுள்ளார். (வ)

# சிங்கப்பூர் அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் எஸ்.ஜெயக்குமார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கைக்கு வந்துள்ளார

இலங்கை வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் அழைப்பை ஏற்று வந்த எஸ்.ஜெயக்குமார் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து வரவேற்கப்பட்டார் (உ-10)

**எரிபொருள்...**

நுகர்வோர் தாராளமாக வாங்கி இருப்பில் வைத்துள்ளதால் தற்போது எரிபொருள் விற்பனை நிலையங்களில் பாவனையாளர்கள எரிபொருளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை எனவும்,இதனால் பௌசர்களில் உள்ள பெற்றோலை எரிபொருள் நிலையங்களில் நிரப்ப முடியாது இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)


உங்கள் அபிமானத்திற்குரிய
**வலம்புரி - சங்குநாதம்** நடாத்தும்
*எழுத்தாளர் சபை*

## அங்குரார்ப்பண வைபவம்

காலம்: இன்று (05.04.2003)சனிக்கிழமை காலை 10.30 மணி
இடம் : வலம்புரி கேட்போர் கூடம்
தலைவர் : திரு.சி.வெற்றிவேலாயுதம்
*(நிர்வாக இயக்குநர்,வலம்புரி)*
பிரதம விருந்தினர்:மூத்த இலக்கிய கர்த்தா
*பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்(நந்தி)*
சிறப்பு விருந்தினர்:உயர்திரு.என்.சரவணபவன்
*(பிராந்திய முகாமையாளர்,யாழ்.ரெலிகொம்)*
ஆசியுரை: அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
*(பிரதம ஆசிரியர்.பாதுகாவலன்)*
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*
வரவேற்புரை: கவிஞர் சு.துரைசிங்கம்
*(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரிய பீடம் வலம்புரி)*
சிறப்புரை: மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா
*(செங்கையாழியான்)*
கருத்துரை:
எழுத்தாளர் அறிமுகம்:
நன்றியுரை: திரு.மு.வாமதேவன்
*(செய்தி ஆசிரியர், வலம்புரி)*

**எழுத்தாளர் சபைக்கு விண்ணப்பித்தவர்களையும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்,
(யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை) வலம்புரிக் குடும்பம்

## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.
சிறுநீர்ப்பா சோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.